புதுக்கோட்டை ஸமஸ்தான

# தேசிய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்] 1943-ம்ஞு ஜூலைமீ 10உ [நெ. 154

பிரஸங்கம் CLIV.

## கில்ட் ஹாலில் பிரதம மந்திரி மிஸ்டர் சர்ச்சிலின் பிரசங்கம்.

ஜூன் 30—1943.

இந்த யுத்தம் திருப்திகரமாகவே நடைபெற்று வருகிறது. நேசநாட்டினருக்கு இரண்டு பெரிய வெற்றிகள் கிடைத்திருக்கின்றன. டூனிஸியா சண்டையைப்பற்றி எல்லோரும் அறிவார்கள். இதில் 3,50,000 ஜெர்மானியர்களும், இதாலியர்களும் கைதி செய்யப்பட்டார்கள், அல்லது உயிர் துறந்தார்கள். ஏராளமான யுத்த தளவாடங்கள் நமது கைவசமாகின, அல்லது அழிவுற்றன. மற்றொன்று மே மாதத்தில் அட்லாண்டிக்கில் நடந்த ஸப்மரீன் வேட்டையில் கிடைத்த வெற்றி.

### அட்லாண்டிக் கடல் யுத்தம்.

மே மாதத்தில் ஜெர்மன் கடற்படை அதிகாரிகள் இங்கிலாந்துக்கு உணவுப்பொருள்களும், இதர சாமான்களும் வருவதைத் தடுக்கப் பெரிதும் முயன்றனர். கூட்டம் கூட்டமாக மார்க்கம் பூராவும் யூ படகுகள் வைக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு கூட்டத்திலும் சுமார் 20 எதிரி ஸப்மரீன்கள் இந்த வேலையில் ஈடுபட்டிருந்தன.

பிரிட்டிஷ் அமெரிக்கா, கானடா விமானங்களும், மாலுமிகளும் ஏராளமான குண்டுகளை எறிந்து இதைத் தடுத்துவிட்டனர். எதிரி ஸப்மரீன்கள் நாசமாக்கப்பட்டன. நமக்கு வெற்றி கிடைத்தது.

மே மாதம் சுமார் 30 ஸப்மரீன்கள் நாசமாக்கப்பட்டன. அவைகளிலுள்ள வேலைக்காரர்களுடன் அவைகள் மூழ்கடிக்கப்பட்டன. அபாரமான நஷ்டங்களைக்கண்டு நடுக்கமுற்று நீர்மூழ்கிகள் பின்வாங்கிவிட்டன. இறந்தவர்களைக் குறித்து துக்கம் கொண்டாடுகின்றன.

மே மாதம் கிடைத்த வெற்றியின் காரணமாகவும் யூ படகுகளின் அழிவு மூலமாகவும் ஜூன் மாதம் நாம் அனுகூலமான நிலைமையிலிருந்தோம். யுத்தத்திற்கப்புறம் இந்த 46 மாத காலமாக நாம் இம்மாதிரியான நிலைமையில் இருந்ததில்லை.

அமெரிக்காவின் ஏராளமான கப்பல் உற்பத்தியும், பிரிடனும், கானடாவும் அனுப்பியிருக்கும் கப்பல்களும் சேர்ந்து, ஜூன் மாதத்தில் நமக்கு ஏற்பட்ட நஷ்டத்தைவிட ஏழு அல்லது பத்து மடங்கு அதிகமாக கப்பல்கள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன.

மே மாதத்திற்கப்புறம் வடக்கு அட்லாண்டிக் சமுத்திரத்தில் ஒரு வியாபாரக் கப்பல்கூட சேதமடையவில்லை. ஜூன் மாதத்தில் நமது கான்வாய்க் கப்பல் கூட்டத்திற்கு எதிர்ப்பு அதிகம் காணப்படவில்லையாயினும் எதிரி நீர்மூழ்கிகளின் நாசம் மட்டும் விருத்தியாகிக் கொண்டேயிருக்கிறது.

மே மாதத்திலும் ஜூன் மாதத்திலும் யூ படகுகளுக்கு ஏற்பட்ட நஷ்டமானது நமது எதிர்த் தாக்குதல்களுக்கும் உதவி செய்திருக்கிறது.

## விமானத் தாக்குதல்கள்.

இவ்விரண்டு மாத காலமாக நாம் ஜெர்மனியில் யுத்த தளவாட உற்பத்தியில் முனைந்துள்ள தொழிற்சாலைகளை அதிகமாகத் தாக்கிவருகிறோம்.

இவ்வருஷத்தின் முதல் பாதியில் இந்தத் தீவின் மீது எறியப்பட்ட குண்டுகளைவிட 5 மடங்கு அதிகமாக பிரிடிஷ் விமானப்படையினர் ஜெர்மனி மீது குண்டுகளை வர்ஷித்திருக்கின்றனர். ஒரு இரவில் அல்ல, ஒருமணி காலத்தில் நாம் டஸ்ஸல்டார்ப் மீது சுமார் 2,000-டன் எடைமானமுள்ள வெடிகுண்டுகளையும் எறிவெடிகளையும் வீசினோம். நமக்கு 38 விமானங்கள் நஷ்டமாயின. இந்தக்கால வரம்பில் எதிரி 1,500-டன் எடைமானமுள்ள வெடிகுண்டுகளைப் போட்டிருக்கிறான். அவனுக்கு 245 விமானங்கள் நஷ்டமாகியிருக்கின்றன.

இது தவிர பிரிடனிலுள்ள அமெரிக்க விமானப்படையினர் பட்டப்பகலில் நடவடிக்கை மேற்கொண்டு, குறிதவறாது அடித்து எதிரியின் யுத்த தளவாட உற்பத்திக்கு ஜீவனாடி போன்ற ஸ்தானங்களைப் பலமாகப் பழுதாக்கியிருக்கிறார்கள். அமெரிக்க விமானிகளும், விமான வேலைக்காரர்களும் சாதுர்யத்துடனும், தைரியத்துடனும், ஆர்வத்துடனும் இடைவிடாது அரிய சேவை புரிந்துவருகிறார்கள்.

குற்றம் பொருந்திய நாடுகளை கடும் தண்டனைக்குள்ளாக்குவதில் இந்த விமானப்படை உபயோகப்படுத்தப்படும். விமானபலத்தைக்கொண்டு ஐரோப்பாவையும் பிறகு உலகத்தையும் ஜயிக்க எதிர்பார்த்தவர்களுக்கும் சிக்ஷை விதிக்கப்படும். இம்மாதிரியான பரிதாபகரமான கதி ஒருவருக்கும் இதுவரையில் ஏற்பட்டதில்லை.

இந்தக் கோடையில் நாம் ரூரைப் பிரதானமாகத் தாக்கினோம். ரூர் பிரதேசத்தில் ஜெர்மன் தளவாட உற்பத்தி அதிகமாக நடக்கிறது. இரவில் நாழிகை அதிகரித்து அமெரிக்க விமானப்படை பலமும் விருத்தியானவுடன் இரவு பகல் என்று பாராமல் ஜெர்மனியிலுள்ள சகல விதமான தொழிற்சாலைகளையும் நாம் கடுமையாகத் தாக்குவோம்.

இப்போது ஜெர்மன் யுத்தகாலத்தொழில் கிராமப் புறங்களுக்குப் போய்விட்டது. நகரங்களை எல்லாம் நாசமாக்கியவுடன் கிராமங்களையும் நாம் தாக்குவோம். இந்த சந்தர்ப்பத்தில் ருஷ்ய விமானப்படையின் உதவியும் நமக்கு கிடைக்கும்.

ஜெர்மன் ஸப்மரீன் நாசம் அந்த நாட்டாரை நம்பிக்கை இழந்து வரும்படி செய்கிறது. தாம் பழிவாங்கப்போவதாகக் கூறிய டாக்டர் கோயபல்ஸ் நேசதேச விமான நடவடிக்கை கடுமையாக இருந்தபோதிலும், தங்களது ஸப்மரீன்கள் இவர்களை அதிகம் கஷ்டப்படுத்தி வருவதாக ஜெர்மன் மக்களிடம் பிரசாரம் பண்ணுகிறார். இந்தப் பிரசாரம் பலிக்காது. சீக்கிரத்தில் மக்கள் உண்மையைக் கண்டுகொள்வார்கள். அப்போது எதிர்காலம் எவ்வளவு மோசமாக இருக்கிறது என்பதை அவர்கள் உணர முடியும். நமது ஸ்திதி முன்னிருந்ததைவிட இப்போது அதிகம் அபிவிருத்தியடைந்திருக்கிறது.

என்ன கஷ்டங்கள் நேர்ந்தாலும் நாம் ஒன்றுபட்டு கடமையைச்செய்து முடிப்போம்.

## இதாலி.

இதாலியின்மேல் இப்போதுதான் குண்டு வீச்சு கொஞ்சம் ஆரம்பித்திருக்கிறது இதற்குள்ளேயே அவர்கள் பெரிய தாக்குதலைப் பற்றிப்பேச ஆரம்பித்து விட்டனர். அது எப்போது நடக்கும், எப்படி இருக்கும் என்பதெல்லாம் அவர்களது கவலை. அதை நிவர்த்திப்பது நமது பொறுப்பல்ல. ட்ரிபோலி, அல்பேனியா, அபிஸீனியா ஆகிய பிரதேசங்களைத் தாங்கள் தாக்கிய விதத்தையும், கிரேக்கரை உபத்திரவித்ததையும் எகிப்தைப் பிடிக்க முயற்சித்ததையும் அவர்கள் மறக்கக்கூடாது.

அவர்களது பீதியைப்போக்க நான் ஒன்றும் செய்யமுடியாது. நமது மக்களுக்கு மட்டும் நான் ஒன்று கூறுவேன். பெரிய ராணுவ நடவடிக்கைகளை ஆரம்பிக்கும்போது ஆபத்துகளும், சஞ்சலமான நிலைமையும் அடிக்கடி தலைகாட்டும். அதிக நம்பிக்கை கொள்ளவேகூடாது. கடல், தரைச்சண்டைகளுக்கு இருநாட்டார் ஏற்பாடு செய்ய வெண்டுமாயின் அதற்குக் காலதாமதம் ஏற்பட்டே தீரும்.

நான் இதைத் தவிர அதிகம் கூறமுடியாது. இலையுதிர் காலம் முடியுமுன் மத்திய தரைக் கடலிலும் இதர பிரதேசங்களிலும் கடும்சண்டை நடக்கும். நாஸிகளும் பாஸிஸ்ட்களும், ஜப்பானியரும் நிபந்தனையின்றி சரணாகதி புரிவதையே நேசநாட்டாரான நாம் கோருகிறோம். அவர்களது பலம் பூராவும் ஒடுக்கப்பட்டு அவர்கள் நம்மிடம் நியாயத்தையும், தயையும் பிரார்த்திக்கவேண்டும் என்பதே இதன் அர்த்தமாகும்.

## பிரிடிஷ் சாம்ராஜ்யம்.

இதுவரை நடந்த சண்டைகள் எல்லாவற்றிலும் இதுவே பிரிடிஷ் மக்களை ஒன்றுபடுத்தியிருக்கிறது. நமது கடமையை நாம் தயங்காமல் நிறைவேற்றுவோம். நாம் ஆக்கிரமிக்க விரும்பவில்லை. நமக்கு நாட்டாசை கிடையாது. வெகுமதியை நாம் எதிர்பார்க்கவில்லை; சமரசத்திற்கும் நாம் தயார் இல்லை.

இந்த லக்ஷியங்கள்தான் நமது மனதில் ஊன்றியிருக்கின்றன. நமது சந்ததியார்கள் நம்மை மதித்துப் பார்க்கும்பொழுதும் இந்த நோக்கங்கள்தான் முன்னிற்கும். பிரிடிஷ் சாம்ராஜ்யத்தில் ஜயிக்கப்பட்ட நாடுகளும் சம்மதத்துடன் வந்த நாடுகளும், யதிருச்சையாகவோ அல்லது காரணத்துடனே நமது மன்னரின் ஆட்சிக்குட்பட்டு நிற்கின்றன.

அதிசயமான அன்பினாலும், ஆதரவினாலும் தான் கானடா, ஆஸ்திரேலியா, நியூஸீலாந்து, தென் ஆபிரிக்கா முதலிய நாடுகள் சாகும் வரையில் போர்புரிவதற்குத் தங்களுடைய துருப்புகளை கடல்தாண்டி அனுப்பியிருக்கிறார்கள்.

## இந்தியப் படைகள்.

மிகப்பெரிய நாடான இந்தியா சீக்கிரம் பிரிடிஷ் சாம்ராஜ்யத்தில் திருப்திகரமான ஸ்திதியைப்பெறும் என நாம் நம்புகிறோம்; அங்கு அநேகர் ராணுவத்தில் சேர்ந்து கீர்த்தியைச் சம்பாதித்திருக்கின்றனர். சுமார் 20 லக்ஷம் பேர் ராணுவத்தில் சேர்ந்திருக்கின்றனர்.

ஜெர்மானியர்கள், இதாலியர்கள், ஜப்பானியர்களுடன் கடும் போர் செய்து புகழ் பெற்றிருக்கிறார்கள்.

பிரிடன், அமெரிக்கா, ருஷ்யா, பிரான்ஸ், எதிரிகள் நாடுகளில் எல்லாப் படையின் எண் லக்ஷக்கணக்கிலேயே கூறப்படுகிறது. ஆனால் இந்தியப் படையில் மட்டும் ஒரு தனி விசேஷம். அதாவது அங்கு அவர்கள் தாங்களாகவே ராணுவ சேவையை மேற்கொண்டிருக்கின்றனர். ஒருவராவது கட்டாயப்படுத்தப்படவில்லை.

## சாம்ராஜ்ய நாடுகள்.

இதர சாம்ராஜ்ய நாடுகளைப்பற்றியும் இவ்விதமேதான் கூறவேண்டும். பலர் கடல் கடந்தும் வந்திருக்கின்றனர்.

இந்த யுத்தத்தில் கலந்துகொண்டு யுத்தத்தின் வெற்றி தோல்விகளையும் பொருட்படுத்தாமல் உத்சாகத்துடனிருந்துவரும் சாம்ராஜ்ய நாடுகளின் உத்ஸாகமானது உலகத்துக்காக நாம் பாடுபடும் நோக்கங்களைப்பற்றி சந்தேகம் கொள்ளும் ஆண்மக்களுக்குச் சரியான பதிலளிக்கும்.

நெருங்கிய பாந்தவ்யமில்லாததும், பலவகைப்பட்டதும், உலகமளாவியுள்ள இந்தச் சங்கத்துக்கு ஒரு மகத்தான சோதனை காலம் வந்தது. மன்னர் வசிக்கும் இத்தீவாகிய நமது தாய்நாட்டிற்குப் பேராபத்து உண்டாயிற்று.

## சாம்ராஜ்யத்தின் ஒற்றுமை.

ஒரு சமயத்தில் இந்தத் தீவு ஹிட்லரால் இதாலி உதவியுடன் தாக்கப்பட்டபோது மிகவும் அபாயகரமான நிலைமை ஏற்பட்டது. அப்போது நாம் பிறர் உதவியின்றி எதிர்த்து நின்றதைத் தற்சமயம் நினைக்கவும் மயிர்க் கூச்சலெடுக்கிறது.

சாம்ராஜ்யம் கலைந்து விடுவதற்கும், உலகத்தின் பல பாகங்களிலுள்ள ஜாதியர்கள் எதிரியுடன் நட்பு ஏற்படுத்திக்கொள்ளுவதற்கும், கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறோமென்று நினைத்தவர்கள் நமது ஆக்ஷியை ஒழித்துவிட்டு வெற்றிபெற்றுவரும் நாஸி, பாஸிஸ்டு வல்லரசுகளுடன் ஒப்பந்தம் செய்து கொள்ளுவதற்கும் அது தகுந்த சந்தர்ப்பமாகயிருந்தது. ஆனால் நடந்தது என்ன?

அப்போது பெரிய தேசங்கள், சிறிய தேசங்கள் பலம் பொருந்தியவைகள் பல மற்றவர்கள், நவீன நாகரீகமுள்ளவர்கள், பிராசீன முறையை அனுஷ்டிப்பவர்கள் எல்லோரிடமிருந்தும் நமக்கு உதவி அளிப்பதாக உறுதிதரப்பட்டது. "இருந்தால் எல்லோரும் இருப்பது, போனால் எல்லோருமே போய்விடுவது" என்றனர் அவர்கள் யாவரும். லண்டனின் ஜீவநாடி ததும்பும் இந்த இடத்தில் இருந்துகொண்டு, எதிர் காலத்தைப்பற்றி நான் நம்பிக்கை கொள்வதை நீங்கள் க்ஷமிப்பீர்கள் என்றே கருதுகிறேன்.

## பிரிடிஷ்—அமெரிக்க ஒற்றுமை.

அமெரிக்காவின் பலம் நம் பயத்தைக் கிளப்பவில்லை. அதன் பிரதான ஸ்தானம் நம்மை பொறாமைப்படவும் செய்யவில்லை. பிரிடிஷ் சாம்ராஜ்ய நாடுகளும், அமெரிக்காவும் இந்த யுத்தத்தை ஒருமித்த கருத்துடன் நடத்துவதிலேயே உலகின் எதிர்காலம் இருக்கிறது.

அட்லாண்டிக் சாஸனத்தில் காணப்படும் உரிமைகளை நிறைவேற்ற அவை ஒன்றுபட்டால் எல்லாம் நன்கு நடக்கும். ஆனால் அவை பிரிந்து சுயேச்சையாகப் போய்விட்டால் உலகத்திற்கு கஷ்டமும், சங்கட்டமும்தான் அதிகரிக்கும். நான் அதிகப்படுத்திப் பேசவில்லை. இது பூராவும் உண்மை. இரு நாடுகளிலும் இந்த அடிப்படையான அம்சத்தில் அசிரத்தையான நபர்கள் சிலர் இருக்கின்றனர்.

மேலே சொல்லியதிலிருந்து நமது கக்ஷியில் சேர்ந்து யுத்தம் செய்யும் நாட்டைப் பற்றியோ, அல்லது யுத்த சிரமங்களை சஹித்துக்கொண்டு நம்முடன் சேர்ந்து யுத்தம் செய்ய முயன்றுவரும் தேசங்களைப்பற்றியோ குறைகூறுவதாகவும் ஏற்படாது.

நேசதேச ஒற்றுமை.

நாம் ருஷ்யாவைமிகவும் பாராட்டுகிறோம். அவர்களுடன் இருபது வருஷ உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்டிருக்கிறது. சீனாவுக்கும் நல்ல காலத்தையே நாம் எதிர் பார்க்கிறோம். பிரான்ஸ் மறுபடியும் ஒன்றுபட்டு பெருமையுடன் சோபிப்பதைக்காண நாம் ஆவலாக இருக்கிறோம்; நமது சகாக்கள் நம்மிடம் உண்மையாக இருக்கின்றனர். இருந்தாலும் பயப்படக்கூடிய அம்சம் மட்டும் இருக்கிறது. பிரிடிஷ், அமெரிக்க நாட்டினர் ஒற்றுமையாக இருந்தால் எல்லாம் நன்மையாக முடியும். பிரிந்துவிட்டால் நாம் வழி தெரியாமல் கொந்தளிக்கும் கடலில் தத்தளிக்க வேண்டியதுதான்.

ஜப்பான்.

ருஷ்யப் போராட்டம் காரணமாகவும் மத்தியதரைக்கடலில் பிரிடிஷ் அமெரிக்கப்படைகளின் நடவடிக்கை காரணமாகவும், ஜெர்மனியும், இதாலியும் ஒடுக்கப்பட்டு பிரிடிஷ் அமெரிக்க விமானிகளால் ஜெர்மன்தொழிற்சாலைகள் யாவும் நாசமாக்கப்பட்டவுடன் நமது படை பூராவும் பஸிபிக் பிரதேசத்திற்கு உடனே ஜப்பானைத் தாக்குவதற்காக அனுப்பப்படும். உங்கள் சார்பிலே நான் இதை அமெரிக்கக் காங்கிரஸ் கூட்டத்திலும் தெரிவித்தேன். ஜப்பானியர் மண்ணைக்கவ்வும் வரை நாம் சும்மா இருக்க மாட்டோம்.

---

# வார யுத்தச் செய்திகள்.

## 3—7—43-லிருந்து 9—7—43-வரை.

**பஸிபிக்.**—நேசதேச தரைமீதும், கடல்மீதும், விமானத்தினாலும் தென்மேற்கு பஸிபிக்கிலுள்ள லே, ஸாலமூவா, மன்டு ஆகிய இடங்களை உடன்கால இலக்குகளாகவும், ரபாலை முடிவான இலக்காகவும்கொண்டு தாக்குதல்கள் செய்யப்பட்டன. 5 முறை செய்த இந் நடவடிக்கைகளில் அமெரிக்கப் படைகள் ஸாலமன்ஸிலுள்ள நியூ ஜார்ஜியா, ரென்டோவா, பென்குணு தீவுகளையும், நியூ கினியிலுள்ள, டிராப்ரெய்ண்ட், வுட்லார்க் தீவுகளையும், நாஸ்ஸா பேயையும் ஆக்கிரமித்தன. அதே சமயத்தில் மூபாவிலும் நியூ கினியாவிலும் பலமாயிருந்த ஆஸ்திரேலியத் துருப்புகள் நாஸ்ஸா பேயில் இறங்கிய அமெரிக்கத் துருப்புகளுடன் சேர்ந்து கொண்டன. அவர்கள் ஸாலமூவாவை நோக்கி முன்னேறுகிறார்கள். போய்னி, ஸாலமூவா ஆகிய இடங்களில் யுத்தம் நடந்தது.

நியூ ஜார்ஜியாவிலிருந்து ஸெலபஸ்வரையிலும், 2,000 மைல்கள் விமானச்சண்டை நடைபெறுகிறது.

அமெரிக்கக் கப்பற்படைகளும் ஜப்பானியக் கப்பற்படைகளும் அப்பிரதேசங்களில் ஜூன் மாதம் 30-ம் தேதி சண்டை நடத்தின. ஜூலை மாதம் 3-ம் தேதி ரென்டோவை நாசப்படுத்தக்கருதிய 3 க்ரூயிஸர்களையும், 4 நாசகாரிகளையும்கொண்ட ஜப்பானியப்படை ஒன்று யுத்தத்திற்கு லாயக்கில்லாமல் செய்யப்பட்டது. நியூ ஜார்ஜியாவிற்கருகிலுள்ள குபாக்கடல் ஜூலை 4, 5-ம் தேதிகள் முதற்கொண்டு கடற்படை நடவடிக்கை நடத்தி வருகிறது. 9 ஜப்பானிய சண்டைக் கப்பல்களுக்கும் ஒரு அமெரிக்க க்ரூயிஸருக்கும் நஷ்டம் ஏற்பட்டது.

**ருஷ்யா.**—1943-ம் வருஷத்திய கோடைகாலத் தாக்குதல் ஆரம்பிக்கப்பட்டுவிட்டது. ஜூலை 5-ம் தேதி ஓரல், குர்ஸ்க், பைல்கோராட் ஆகிய 3 பிரதேசங்களிலும் சேர்ந்தாற்போல் யுத்தம் துடங்கி, மூன்று நாட்களில் 1,500 டாங்கிகளும், 7,001 விமானங்களும், 30,000 மனிதர்களையும் இழந்து ஒன்று அல்லது இரண்டு இடங்களில் ருஷ்ய சேனையைப் பிளந்து கொண்டு சென்றது.

அதே சமயத்தில் ருஷ்யர்கள் லட்டிவ்யன் எல்லேக்கு அருகிலுள்ள வெல்க்கி லூக் என்ற இடத்தில் பலத்த தாக்குதல்செய்து பெரும் நஷ்டத்தை விளைவித்தனர்.

**விமானச்சண்டை.**—ஜெர்மனி, இதாலி, ஆக்கிரமிக்கப்பட்ட ஐரோப்பா ஆகிய பிரதேசங்களில் கடும் விமானத்தாக்குதல்கள் நடந்துகொண்டுதானிருக்கின்றன. ஜுன் மாதம் 28-ம் தேதி கொலோன் 117-ம் தடவை படையெடுக்கப்பட்டது. ஜுலை 5-ம் தேதி கிரீட் தாக்கப்பட்டது. இந்த வாரத்தில், பிரான்ஸிலுள்ள நாஸர், லெமன்ஸ், லில்லியும், ஹாலந்திலுள்ள இஜ்மூதினும், பெல்ஜியத்திலுள்ள கெண்ட், கூர்ட்ரையும், இதாலியிலுள்ள மெஸ்ஸின், கலாபிரியா, பிஸ்காரி, பாலர்மோ, ஸிஸிலி, லீஸ் ஆகிய இடங்களையும், கிரீஸிலுள்ள கில்லனியும் படையெடுக்கப்பட்டன.

**சைனு.**—டங்டிங ஏரிக்கு மேற்கிலுள்ள யாவக்ட்ஸிமான் தென்கரையிலுள்ளதும், ஜப்பானியர்களின் 4 தளங்களில் முக்கியமானதுமான ஆச்சிக்கோவ் என்ற இடத்தில் கடுமையான யுத்தம் நடந்துகொண்டிருக்கிறது.

**பர்மா.**—தரையில் பொதுவாய் யுத்த நிலைமையில் மாறுபாடு ஒன்றும் ஏற்படவில்லை. ராயல் விமானப்படையின் கடுந்தாக்குதல்கள் நடந்துகொண்டுதானிருக்கிறது. ஆனால் வேவு பார்த்தலும் நடந்து கொண்டுதானிருக்கிறது. பூதிடாங்கில் எதிரியின் கூட்டம் ஒன்று ஒளிந்து கொள்ளுமாறு செய்யப்பட்டது. சப்ரபான் என்னுமிடத்தில் எதிரிகள் கச்சின் படைகளோடு சண்டை செய்தனர். அக்யாப், அக்யாப் தீவு, புரோப் டாங்குப் ரோட், ஐராவதியில் படகுகள், காலிமிமோவிற்கருகிலுள்ள ஸ்டோர்கள், சிரியனிலுள்ள எண்ணெய்க் கிடங்குகள், சாக்சிலுள்ள கிட்டங்கிகள், எனங்யாத்திலுள்ள எண்ணெய்க் கிணறுகள், யாம்வியிலுள்ள ராணுவ நிலயங்கள் நியாங்யானிலுள்ள எதிரியின் கட்டடங்கள், மிதிங் ரயில்வே பாலம், தான்பூஸ்யத்திலுள்ள ரயில்வே கட்டும் தளங்கள் ஆகிய இலக்குகள் படையெடுக்கப்பட்டன.

---

## சத்துருவினுடையவும், சத்துருவினுல் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில் பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

**28—6—43.** (திங்கட்கிழமை).

**ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).**

பகல்.—யூ-படகு ஸ்தாபனங்கள்—பிரான்ஸிலுள்ள செயிண்ட் நாசேர் (St. Nazaire).

விமான நிலயம்.—போமாண்ட்-லி-ரோஜர் (6 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).

இரவு.—பெரிய தொழிற்சாலைகளுடைய நகரம்.—ஜெர்மனியிலுள்ள கொலோன் (Cologne).

யூ-படகு தளங்கள்.—ஜெர்மனியிலுள்ள ஹாம்பர்க் (Hamburg).

சுரங்கவேடி பாவுதல்.—எதிரி ஜலப்பிராந்தியங்களில்.

எதிரிக் கப்பல்கள்.—இங்கிலீஷ் கால்வாய் (English Channel).

ரயில்வேலக்ஷியங்கள்.—பிரான்ஸ் (France). (25 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).

**இதாலி (Italy),**

**மத்தியதரைக்கடல் (Mediterranean).**

(2 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை, 12 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).

**இதாலியக் கடற்படை தளம்.**—லெக்ஹான் (Leghorn).

ராணுவ நிலயங்கள், நிர்வாகக் கட்டடங்கள், **விமானந்தாங்கிகள்.**—ஸார்டீனியாவிலுள்ள ஒலிபா (Oliba), வெனுபயோரிட்டா (Venafliorita), அல்கீரோ பெர்ட்டிலா (Alghero Fertilla).

**விமான நிலயம்.**—ஸார்டீனியாவிலுள்ள மில்லிஸ் (Millis), டெஸிமோமன்னு (Decimomannu).

தொழிற்சாலைகள்.—ஸிஸிலியிலுள்ள லிகாதா (Licata).

**விமான நிலயங்கள்.**—ஸிஸிலியிலுள்ள கோமிஸோ (Comiso), மெஸ்ஸினு (Messina).

**ருஷ்யா (Russia).**

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

ஸ்டேஷன் கட்டடங்கள், ரயில் வண்டிகள்.—ஓரெல் (Orel).

ரயில் வண்டிகள்.—காராச்சேவ் (Karachev).

ஸ்டோர்கள், தளவாடங்கள், வண்டிகள்.—டமான் (Taman). (ருஷ்ய விமான நஷ்டம் இல்லை).

**தூரக்கிழக்கு (Far East).**

**ஜப்பானியச் சைனியங்கள்.**—ரெகாதா பே (Rekata Bay).

நியூ ஜார்ஜியாவிலுள்ள முண்டா (Munda).
ஜப்பானியக் கடல் படைகள்.—மத்திய ஸாலமன்ஸ் (Central Solomons).
ஜப்பானியச் சைனியங்கள்.—அலூஷியனிலுள்ள கிஸ்கா (Kiska), சிறிய கிஸ்கா (Little Kiska).
எதிரி ரயில்ரோட் தளங்கள்.—பர்மாவிலுள்ள பின்மானு (Pyinmana), ஸகெய்ங் (Sagaing).
ஜப்பானியத் துருப்புகள்.—பர்மாவிலுள்ள அக்யாப் (Akyab).
எதிரி சைனியங்கள் தங்கும் குடிசைகள்.—நியோஹாங்கற்கருகில் (Nyohaung).
படகுகள்.—ஐராவதி (Irrawady), கலடான் (Kaladan) நதிகள்.

**29—6—43.** (செவ்வாய்க்கிழமை).

**ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).**

ராணுவ லக்ஷியங்கள்—பிரான்ஸிலுள்ள லெமான்ஸ் (Lemans).

**இதாலி (Italy), மத்தியதரைக்கடல் (Mediterranean).**

வேவுபார்த்தல்.—மத்திய மத்தியதரைக்கடல் (Central Mediterranean). (2 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை.)
படது போக்குவரத்து முடியுமிடம்.—இதாலியிலுள்ள ரெகியோடி கலாபிரியா (Reggio Di Calabria).
ஒரு ரயில்.—கிரீஸ் (Greece).
சேனை சேகரிக்குமிடங்கள், படகுப் போக்குவரத்து முடியுமிடம்.—ஸிஸிலியிலுள்ள மெஸ்ஸினு (Messina).
விமானச் சண்டைகள்.—கிரீஸ் (Greece). (1 எதிரி விமானம் சுட்டுத்தள்ளப்பட்டது).

**ருஷ்யா (Russia).**

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

**தூரக்கிழக்கு (Far East).**

அலூஷியனிலுள்ள கிஸ்கா (Kiska).
நியூ ஜார்ஜியாவிலுள்ள முண்டா (Munda).
ரேகாதா பே (Rekata Bay).
படகுகள் இதர சாதனங்கள்.–பர்மாவிலுள்ள அக்யாப் (Akyab)பிற்குத் தெற்கு.

**30—6—43.** (புதன்கிழமை).

**ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).**

பகல்.—நீராவி யந்திரங்கள்.—வடக்கு பிரான்ஸ். (20 நீராவியந்திரங்கள் நாசமாக்கப்பட்டன).

**இதாலி (Italy), மத்தியதரைக்கடல் (Mediterranean).**

ராணுவ நிலயங்கள்.—ஸிஸிலியிலுள்ள பாலெர்மோ (Palermo).
விமான நிலயங்கள்.—ஸிஸிலியிலுள்ள ஸியாக்கா (Sciacca), பொரிஸ்ஸோ (Borizzo), மிலோ (Milo).
ரயில்வே ஸ்டேஷன்.—ஸார்டீனியாவிலுள்ள காக்லியாரி (Cagliari).

**ருஷ்யா (Russia).**

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

**தூரக்கிழக்கு (Far East).**

ஜப்பானியச் சைனியங்கள்.—நாஸ்ஸா கடல் கரை, (Nassau Bay).
நியூ கினியிலுள்ள பிடால் நதி (Bitol).
ஜப்பானியச் சைனியங்கள், விமான நிலயங்கள்.—நியூ கினியிலுள்ள ஸலாமூவா (Salamaua).
எதிரி விமான நிலயங்கள்.—நியூ பிரிடனிலுள்ள ரபால் (Rabaul).
ஜப்பானியச் சைனியங்கள்.—ரெண்டோவாத் (Rendoa) தீவு.
ஜப்பானியக் கப்பல்கள்.—நியூ பிரிடனிலுள்ள கிளஸ்டர் முனை (Cape Gloucester).
ஜப்பானியத் துருப்புகள்.—பர்மாவிலுள்ள மியோஹாங் (Nyohaung)கிற்கருகில்.
படகுகள்.—ஐராவதி (Irrawaddy) நதி.

**1—7—43.** (வியாழக்கிழமை).

**ஜெர்மன் ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).**

பகல்.—விமானத் தாக்குதல்கள்— வடக்கு பிரான்ஸ் (Northern France), ஹாலந்து (Holland).
எதிரிக கப்பல்கள்.—ஹாலண்டிலுள்ள ஹூக் (Hook).

**இதாலி (Italy), மத்தியதரைக்கடல் (Mediterranean).**

விமான நிலயம்.—ஸிஸிலியிலுள்ள பிஸ்க்காரி (Biscari).
ஒரு கப்பல்.–லெவகாஸ் (Levkas) கால்வாய்.
வேவு பார்த்தல்.—மத்திய மத்தியதரைக்கடல் (Central Mediterranean). (4 எதிரி விமானங்கள் நாசமாக்கப்பட்டன).
ரயில்வே தளங்கள்.—ஸிஸிலியிலுள்ள கடானியா (Catania). (5 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).

**ருஷ்யா (Russia).**

விமானச் சண்டைகளும் தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.
துறைமுகம்.—டமானிலுள்ள கெர்ச் (Kerch), சென்னயா (Sennaya).

**தூரக்கிழக்கு (Far East).**

ஜப்பானியச் சைனியங்கள்.—நியூ ஜார்ஜியாவிலுள்ள முண்டா (Munda), கொலம்பங்காராத் தீவிலுள்ள விலா (Vila).
வனகானவ் (Venakanan), ரபோபோ (Rabo Po) விமான நிலயங்கள்.—நியூ பிரிடனிலுள்ள ரபால் (Rabaul).
விமான நிலயம்.—நியூ கினியிலுள்ள ஸலாமூவா (Salamaua), லே (Lae).
ஸ்டோர் கட்டடங்கள், சேனைகள் தங்கியிருக்குமிடங்கள்.—பர்மாவிலுள்ள அக்யாப் (Akyab).

ஸ்ப்ளைக் கப்பல்கள்.—பர்மாவிலுள்ள அரக்கான் (Arakan) கரை.

பர்மாவிலுள்ள புரோம் டாங்குப் (Prome-Taungup) பாதை.—

எதிரி கப்பல்கள், படகுகள்.—பர்மாவிலுள்ள ஐராவதி (Irrawaddy).

ரயில் ரோடுகள்.—பர்மாவிலுள்ள தான்புஸயாத்தி (Thanbyuzayat) (பாங்காக் (Bangok) கிற்குப் போகும்பாதை.

ரயில்ரோட் ஸ்தாபனங்கள்.—பர்மாவிலுள்ள கிங்கான் (Kyungon), காலின் (Kawlin).

**2—7—43** (வெள்ளிக்கிழமை).

**ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).**

பகல்.—(10 எதிரி விமானங்கள் நிர்மூலமாக்கப்பட்டன; 1 நேசதேச விமானம் காணப்படவில்லை).

எண்ணெய்க் கிடங்கு.—ஹாலந்திலுள்ள இஜ்மூய்டன் (Ijmuiden).

இருப்புப் பாதைகள்.— பெல்ஜியத்திலுள்ள கெண்டிற் (Ghent) கருகில்.

ரயில்வே ஜங்ஷன்கள்.—பெல்ஜியத்திலுள்ள கூர்ட்ரெய் (Courtrai), பிரான்ஸிலுள்ள லில்லி (Lille).

விமானத் தாக்குதல்கள்.—லோகண்ட்ரிஸ் (Low Countries), பிரான்ஸ் (France).

இரவு.—சுரங்கவேடி பாவுதல்—எதிரி ஜலப்பிராந்தியங்களில்.

**இதாலி (Italy),**

**மத்தியதரைக்கடல் (Mediterranean).**

விமான நிலயம்.— இதாலியிலுள்ள லீஸ் (Lecce). (12 எதிரி விமானங்கள் சுட்டுத் தள்ளப்பட்டன).

கப்பல்கள்.—கிரீஸிலுள்ள கில்லென் (Kyllene) துறைமுகம்.

2 படகுகள்.—லூயூகாஸ் (Leu Kas) கால்வாய்.

விமான நிலயங்கள்.—இதாலியிலுள்ள குரோட்க்ளி (Grottaglie), ஸான் பான்க்ரேஸியா (San Pancrazio).

விமானத் தாக்குதல்கள்.— தென்கிழக்கு ஸிஸிலி. (2 எதிரி விமானங்கள் சுட்டுத் தள்ளப்பட்டன; பல நாசமாக்கப்பட்டன).

சேனைகள் தயார்செய்து சேமிக்குமிடங்கள்.—ஸிஸிலியிலுள்ள ஆல்பியா (Olbia), ட்ரபானி (Trapani).

கடற்கரை லக்ஷியங்கள்.—இதாலியிலுள்ள ரோமிற்கு (Rome) அருகில்.

**ருஷ்யா (Russia).**

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

ஜெர்மன் துருப்புகள், உதவி சைனியங்களும்.—குபான் (Kuban).

**தூரக்கிழக்கு (Far East).**

விமான நிலயம்.—நியூ பிரிட்னிலுள்ள ரபால் (Rabaul); நியூ கினியிலுள்ள ஸலாமூவா (Salamaua).

ஜப்பானியச் சைனியங்கள்.—நியூஜார்ஜியாவிலுள்ள முண்டா (Munda).

எதிரி ஸ்டோர்கள்.—பர்மாவிலுள்ள காலிமியோ (Kalemyo).

படகுகள்.— பர்மாவிலுள்ள சிண்ட்வின் (Chindwin), ஐராவதி (Irrawaddy).

ராணுவமிருக்குமிடங்கள்.—பர்மாவிலுள்ள மாயு தீபகற்பம் (Mayu).

எண்ணெய்க் கிடங்குகள்.—பர்மாவிலுள்ள சிரியாம் (Syriam).

கட்டடங்கள்.—பர்மாவிலுள்ள சாக் (Chauk).

எண்ணெய்க் கிணறுகள். — பர்மாவிலுள்ள யெனங்யான் (Yenangyan).

எதிரி ராணுவ நிலயங்கள்.—பர்மாவிலுள்ள பியாபீ (Pyawbwe), நியானுங்யான் (Nyanungyan).

எதிரி இருப்புப்பாதை கட்டும் தளங்கள்.—பர்மாவிலுள்ள தான்பூஸயத் (Thanbyuzayat).

**3—7—43.** (சனிக்கிழமை).

**ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).**

பகல்.—நீராவி யந்திரங்கள்.—சைகைகாட்டும் யந்திரங்கள்.

எண்ணெய்க் கிணறுகள், தொழிற்சாலைகள்.—பிரான்ஸ் (France), பெல்ஜியம் (Belgium), ஹாலந்து (Holland). (2 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).

இரவு.—தொழிற்சாலை நகரம்—ஜெர்மனியிலுள்ள கொலோன் (Cologne).

சுரங்கவேடி பாவுதல்.—எதிரி ஜலப்பிராந்தியங்களில்.

வேவு பார்த்தல்.—லோகண்டிரீஸ் (Low Countries). (1 எதிரி விமானம் சுட்டுத் தள்ளப்பட்டது. 32 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).

**இதாலி (Italy),**

**மத்தியதரைக்கடல் (Mediterranean).**

(10 எதிரி விமானங்கள் சுட்டுத் தள்ளப்பட்டன; 9 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).

விமான நிலயங்கள்.—ஸார்டீனியாவிலுள்ள சிலிவானி (Chilivani), ஆல்கெரோ (Algero), மிளி (Mili), கபோடெர்ரா (Capoterra), ஸிஸிலியிலுள்ள மிலோ (Milo), ஷியாக்கோ (Sciacca), கோமிஸோ (Comiso).

கம்பியில்லாத் தந்தி நிலயம், பீரங்கி ஸ்தானங்கள்.—இதர இலக்குகள்—ஸார்டீனியா (Sardinia).

விமான நிலயம்.—ஸிஸிலியிலுள்ள பிஸ்காரி (Biscari).

ரயில்வே ஸ்தாபனங்கள்.—ஸிஸிலியிலுள்ள கடானியா (Catania).

**ருஷ்யா (Russia).**

(26—6—43 முதல் 3—7—43 வரை முடியும் வாரத்தில் ருஷ்ய விமான நஷ்டம் 18. எதிரி விமான நஷ்டம் 66).

விமானச்சண்டைகளும், தரைமீதுள்ள விமான ங்களும்.-ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

கருங்கடல் துறைமுகங்கள்.—கெர்ச் (Kerch), டமான் (Taman).

**தூரக்கிழக்கு (Far East).**

ஜப்பானியச் சைனியங்கள்.—அலூஷியனிலுள்ள கிஸ்கா (Kiska).

விமான நிலயம்.—நியூ ஜார்ஜியாவிலுள்ள முண்டா (Munda).

ஜப்பானியச் சைனியங்கள்.—நியூ ஜார்ஜியாவிலுள்ள ஸலாமூவா (Salamaua), வான்கனு தீவு (Vanganau)

ரயில்ரோட் தளங்கள்.—பர்மாவிலுள்ள புரோம் (Prome), ஷ்விவேபோ (Shwebo).

ராணுவ நிலயங்கள்.—பர்மாவிலுள்ள மிக்டீலா (Meiktila).

விமான நிலயம்.—பர்மாவிலுள்ள கங்காங் (Kangaung).

ரயில்வே பாலம்.—பர்மாவிலுள்ள மிட்னி (Myitagne).

தொழிற்சாலைப் பிரதேசங்கள்.—பர்மாவிலுள்ள மிங்யான் (Myingyan).

**4—7—43.** (ஞாயிற்றுக்கிழமை).

**ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).**

(8 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை. 2 எதிரி விமானங்கள் சுட்டுத் தள்ளப்பட்டன).

பகல்.—விமான தொழிற்சாலை—லெமான்ஸ் (Lemans).

சரிபார்க்குமிடங்கள்.—நாண்டிஸ் (Nantes).

யூ படகு ஸ்தாபனங்கள்.—லாபல்லிஸ் (Lapallice).

சேனைகள் தயார்செய்து சேகரிக்குமிடங்கள்.-பிரான்ஸிலுள்ள அமீயான் (Amiens).

இரவு.—ஸப்ளை க்கப்பல்—நார்வீஜியன் (Norwegian) கடற்கரை.

**இதாலி (Italy),**

**மத்தியதரைக்கடல் (Mediterranean).**

விமான நிலயங்கள்.—கடானியா (Catania), ஜெர்பினி (Gerbini), ஷியாக்கா (Sciacca), கோமிஸோ (Comiso), மிலோ (Milo). (49 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன. 16 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).

கடல் விமான தளம்.—லிடோடிரோமா (Lido Di Roma).

கப்பல் கட்டும் துறைகள்.—ஸார்டீனியாவிலுள்ள டிரபானி (Trapani).

**ருஷ்யா (Russia).**

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

**தூரக்கிழக்கு (Far East).**

ஸப்ளை கப்பல்.—நியூஜார்ஜியாவிலுள்ள வானிமோ (Vanimo).

விமான நிலயம்.—நியூ கினியிலுள்ள ஸலாமூவா (Salamaua).

டாலாக்கடல், ஜப்பானியச் சைனியங்கள்.—நியூஜார்ஜியாவிலுள்ள முண்டா (Munda).

அலூஷியனிலுள்ள கிஸ்கா (Kiska), கொலம்பங்காரத்தீவிலுள்ள விலா (Vila).

குலாகுடாவிலுள்ள பேய்ரோகோ (Bairoko).

ரெண்டோவாதீவு (Rendova Island).

சாமானிறங்குமிடங்கள்.—பர்மாவிலுள்ள அக்யாப் (Akyab).

படகுகள்.—பர்மாவிலுள்ள ஷின்வென் (Shinwel).

## விரோதிகளின் விமானப்படையெடுப்புகளின் விவரங்கள்.

**29—6—43** (செவ்வாய்க்கிழமை).

**பிரிடன் (Britain).**

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

**ருஷ்யா (Russia).**

ஒரு இடம்.—லெனின்கிராட்டிற்கு (Leningrad) அருகில்.

**தூரக்கிழக்கு (Far East).**

ஒரு தகவலும் கிடைக்கவில்லை.

**30—6—43.** (புதன்கிழமை).

**பிரிடன் (Britain).**

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

**மத்தியதரைக்கடல் (Mediterranean).**

பாண்டல்லேரியா (Pantellaria). (2 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).

**தூரக்கிழக்கு (Far East).**

ஆஸ்திரேலியாவிலுள்ள டார்வின் துறைமுகம் (Port Darwin). (8 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன. 6 நாசமாக்கப்பட்டன). (நேசதேச விமானங்கள் காணப்படவில்லை.

சிறிய அமெரிக்க வியாபாரக் கப்பல்.-ஆஸ்திரேலியாவில் கிழக்குக் கரை.

**1—7—43.** (வியாழக்கிழமை).

**பிரிடன் (Britain).**

ஒரு தகவலும் இல்லை.

**ருஷ்யா (Russia).**

ருஷ்யப் போக்குவரத்துகள்.—முன்னேறித் தாக்கும் அரண்களுக்குப்பின்.

**தூரக்கிழக்கு (Far East).**

விமானச் சண்டைகள்.—நியூ ஜார்ஜியாத் தீவு (New Georgia).

அமெரிக்கச் சைனியங்கள்.-நாஸபே (Nassau Bay).

**2—7—43.** (வெள்ளிக்கிழமை).

**பிரிடன் (Britain).**

எதிரி விமான நடவடிக்கை பிரிடனில் ஒரு இடத்திலும் இல்லை.

**தூரக்கிழக்கு (Far East).**

அமெரிக்கச் சைனியங்கள்.—ரெண்டோவாத் தீவு (Rendova Island),

நேசதேசச் சைனியங்கள்.—நியூ ஜார்ஜியாத் தீவு (New Georgia).

**3—7—43** (சனிக்கிழமை).

**பிரிடன் (Britain).**

எதிரி விமான நடவடிக்கை எதுவும் இல்லை.

**ருஷ்யா (Russia).**

காலினின் (Kalinin) பிரதேசம்.

**தூரக்கிழக்கு (Far East).**

அமேரிக்கச் சைனியங்கள்.—நியூ ஜார்ஜியா (New Georgia), ரென்டோவாத்தீவு (Rendova).

**4—7—43.** (ஞாயிற்றுக்கிழமை).

**பிரிடன் (Britain).**

எதிரி விமான நடவடிக்கை எதுவும் இல்லை.

**ருஷ்யா (Russia).**

குர்ஸ்க் (Kursk) பிரதேசம்.

**தூரக்கிழக்கு (Far East).**

அமேரிக்கச் சைனியங்கள்.—நியூ ஜார்ஜியா (New Georgia), நாஸ்ஸாபே (Nassau)

**5—7—43.** (திங்கட்கிழமை).

**பிரிடன் (Britain).**

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

**ருஷ்யா (Russia).**

ஓரல் (Orel), குர்ஸ்க் (Kursk), பயில்கோராட் (Byelgorod) பிரதேசம்.

**தூரக்கிழக்கு (Far East).**

ஒரு தகவலும் இல்லை.

---

# யுத்தக் குறிப்புகள்.

**தேசீய யுத்த முன்னணி.** இந்தப் பிரசுரத்துடன் நமது தேசீய யுத்த முன்னணி பிரசுரங்களின் மூன்ருவது ஆண்டு முடிந்துவிட்டது. இந்த மூன்று வருஷங்களுக்குள்ளாக நேசநாடுகள் அபாயகரமான நிலைமையிலிருந்து எதிரிகள் நிபந்தனையற்ற சரணுகதி செய்யவேண்டுமென்ற உத்தரவு பிறப்பிக்குமபடியான நிலைமையை அடைந்துவிட்டார்கள். இந்த மூன்று வருஷங்களுக்குள்ளாக அச்சு நாடுகளின் துரோகத்துக்குத் தண்டனை கிடைத்துவிட்டது. இதாலிய சாம்ராஜ்யம் போய்விட்டது. ஆபிரிக்காவிலுள்ள அச்சுத் துருப்புகள் நாசமாகிவிட்டன. ரூர் பிரதேசம் அழிந்துவிட்டது. இந்த மூன்று வருஷங்களில் இந்தப் பிரசுரமானது நல்ல நம்பிக்கையுடனும், சிநேகிதனையும், எதிரியையும் ஒரேவிதமாக மதித்தும், தோல்விகளினின்றும் கிலேசமடையாமலும் வெற்றிகளிலிருந்தும் அதிக குதூகலமடையாமலும், நிச்சயமாக இறுதியில் நமக்கு வெற்றிகிடைக்குமென்ற நம்பிக்கையுடனும் வேலை செய்திருக்கிறது.

இந்த மூன்று வருஷங்களிலும் விஷமப் பிரசாரத்தை ஒழிப்பதிலும், "இந்தியாவை விட்டு அகலுக" போன்ற இதர தொந்தரவுகளை நிவர்த்திப்பதிலும், ஒவ்வொரு கிராமத்திலும், நகரத்திலும் இடைவிடாது பிரசாரம் செய்வதிலும் ஈடுபட்டிருக்கிறோம். இதன் மூலம் சந்தேகமும், பீதியும்கொண்ட ஜனங்கள் இப்பொழுது வெற்றியில் நிச்சயமும், நம்பிக்கையும் பெற்றுவிட்டார்கள். நம்முடைய கொள்கை, தீவிரமான நம்பிக்கையுடனிருப்பது. இதைத்தான் ஒரு கவி பின்கண்ட செய்யுளில் வெளியிட்டிருக்கிறார். நமது பிரயத்னம் பிரயோஜனமில்லையென்றும், நம்முடைய பரிச்சிரமங்களும் வீணுகின்றனவென்றும் எதிரி முறியடிக்கப்படவில்லையென்றும், நிலைமையில் மாறுதல்கள் ஏற்படவில்லையென்றும் நினைக்கவேண்டாம். நம்பிக்கை கனவென்று நினைத்தால் பீதியும் தோற்றம் தான். உன்னுடைய சகாக்கள் எதிரில் காணப்படும் சண்டையில் ஓடுகிறவர்களைத் துரத்தியடிக்கிறார்கள். அங்கே பலமாகவும் ஊன்றியிருக்கிறார்கள்.

சோர்வடைந்த துருப்புகள் வெற்றிகரமாகப் பிரதேசங்களைப் பிடிக்கவில்லையென்று நினைக்கலாம். ஆகிலும் சாவதானமாக ஒவ்வொரு இடத்திலும் மகத்தான தாக்குதல் நடைபெறப்போகிறது. கிழக்குப் பக்கத்தில் சூரியன் உதித்து, அந்தகாரம் நீங்கி வெளிச்சம் உண்டாகியபோதிலும், மேற்குப் பக்கத்திலும் வெளிச்சம் பரவி உலகம் பூராவும் இருள் நீங்கிவிடுகிறது.

வி வி வி வி வி

**கில்டுஹாலில் மிஸ்டர் சர்ச்சிலின் பிரசங்கம்.** வாஷிங்டனிலிருந்து திரும்பிவந்த பிறகு ஜூன் மீ 30உயன்று மிஸ்டர் சர்ச்சில் செய்த பிரசங்கம் சமயோசிதமானது. அன்று அவருக்கு வழங்கப்பட்ட லண்டன் மா நகரத்தின் ஸ்வதந்திரப்பட்டம், உலகத்தார் அவருடைய தலைமையின்கீழ் யுத்தம் செய்யும் ஸ்வதந்திர லக்ஷியத்தை அடையாளமாய்க் காட்டக்கூடியது. மேன் கூரையில்லாமல் பாழடைந்த கில்ட்ஹால் கட்டடம் 1940-ம் வருஷம் நடைபெற்ற மின்னல் விமானப்படை

யெடுப்பையும் சமாளித்தது. அதன் 500 வருஷமாக நிற்கும் மதில் சுவர்கள் நின்றுகொண்டிருக்கின்றன. பிரிடனின் வலிமையையும், அந்தக் கட்டடம் விளக்கிக் காட்டுகிறது. அந்த ஹாலிலுள்ள வாடர்லூ, ட்ரபால்கர் யுத்தப் படங்களும், நெல்ஸன், வெல்லிங்டன், பிட் முதலியவர்களுடைய சித்ரங்களும் நெபோலியனைத் தோற்கடித்த தீரர்கள் போன்றவர்கள் இப்பொழுது ஹிட்லரை முறியடிக்கத் தோன்றிவிட்டார்களென்று வெளியிடுகின்றன.

வி வி வி வி வி

**மே, ஜூன் மாதங்கள்.** கில்டுஹால் பிரசங்கத்தில் "இலையுதிர் காலம் துவங்குமுன் மத்தியரைக் கடலிலும், மற்ற இடங்களிலும் பலமான யுத்தம் நடைபெறும்" என்று மிஸ்ட்டர் சர்ச்சில் செய்த பிரசங்கம் மழமழப்பான பேச்சென்றாலும் எதிரியின் மனதைக் கலக்கப் போதுமானது. மே, ஜூன் மாதங்களில் நேசதேசங்களுக்குக் கடலிலும், ஆகாயத்திலும் ஏற்பட்ட வெற்றிகளைப்பற்றிய அறிவிப்பு ரொம்பவும் 'சந்தோஷகரமானது. மே மாதத்தில் பிரிடனுக்கு உணவுப் பொருள்களைக் கொண்டுவரும் சாமான கப்பல்களை வழிமறிக்க ஜெர்மன் யூ படகுகள் செய்த முயற்சி வீணாகிவிட்டது எதிரிக்கு 30 யூ படகுகள் நஷ்டமாவிட்டன. ஜூன் மாதத்தில் யூ படகுகளின் தாக்குதல்களே ஏற்படவில்லை. மிஸ்ட்டர் சர்ச்சில் சொன்னபிரகாரம் யூ படகுகள் தளங்களுக்குச் சென்று காயங்களைப் பழுதுபார்த்துக்கொண்டும், நஷ்டமடைந்தவர்களைக் குறித்து துக்கித்துக்கொண்டுமிருந்தன.

மே, ஜூன் மாதங்களில் நேசதேச வெடி விமானங்களின் நடவடிக்கையும் பலமாக நடைபெற்றது. ஸண்டே டைம்ஸ் பத்திரிகையின் ஆகாய நிருபர் சொல்லுவதுபோல், ஜெர்மன் விமானப்படை அழிந்துவிடும் நிலைமையிலிருக்கிறது. ஜூன் மாதத்தில் அதற்கு ஏற்பட்ட நஷ்டத்தை புதிய விமானம் கட்டும் தொழிற்சாலைகள் சரிக்கட்டிவிடமுடியாது. ஜெர்மன் விமானப்படை நாசமடைந்தவுடன் பாக்கியுள்ள விமானப்படையும் கோடைகால முடிவில் உபயோகப்படுத்தப்படும்.

வி வி வி வி வி

**பூச்சாண்டித் தாக்குதல்கள்.** ஜெர்மனி மே, ஜூன் மாதங்களில் பூச்சாண்டித் தாக்குதல்களுக்குட்பட்டது. பிரிடிஷ் விமானப் படையைச் சேர்ந்த உலகத்திலேயே அதிக வேகம்பொருந்திய மஸ்கிடொ விமானப்படைகள் ஜெர்மனிக்குள் வெகுதூரம் சென்று அடிக்கடி தொந்தரவு செய்துவந்தன. அடிக்கடி அபாயம் விளைவித்தபடியால் இந்தத் தாக்குதல்கள் ஜெர்மானியரின் மனோநிலையைக் குலைத்துவிட்டன.

வி வி வி வி வி

**அதிக விமான உற்பத்தி.** எதிரியைப் பிரமிக்கும்படி செய்து, அவனை அழிப்பதற்கு ஏராளமான விமானங்கள் கட்டப்படும். 71,500,000.000 டாலர்கள் செலவிடக்கூடிய யுத்தச் செலவு திட்டத்தை ஜனாதிபதி பிரேரேபிப்பார். சென்ற வருஷத்தைவிட மூன்று மடங்கு அதிகச் செலவுக்குத் திட்டம்போட்டிருக்கிறது. 99,740 விமானங்களும் உற்பத்தி செய்யப்படும். இங்கிலாந்திலும் விமான உற்பத்தி அதிகப்படுத்தப்படும் என்றும், அதற்காக இதர தளவாட உற்பத்தி குறைவுபடுத்தப்படுமென்றும் ஏற்கனவே நமது விமான உற்பத்தி அச்சு நாடுகளின் பரிமாணத்தைத் தாண்டிவிட்டதென்றும் ஆலிவர் லிட்டில்டன் வெளியிட்டார்.

வி வி வி வி வி

**புத்தி பிரமம்.** நாஸிகளின் பிரசாரத்தில் தடுமாற்றம் ஏற்பட்டுவிட்டது, சமீபகாலத்தில் ஜெர்மன் பிரசாரத்தில் காணப்படும் குழப்பத்தையும்,' அபத்தங்களையும் நோக்கினால் விமானத் தாக்குதலினின்றும் எதிரிகளின் புத்தி பேதித்துவிட்டதென்று சொல்லவேண்டியிருக்கிறது. ஜெர்மனியில் விமான எதிர்ப்பு வசதிகளும், பெரிய தேடு விளக்குகளும், சாமான்களை மறைபொருளாக்கும் வசதிகளும் ஏராளமாகயிருக்கின்றனவென்று ஜெர்மன் ஒலிபரப்பில் சொல்லும்பொழுதும், பிரிடிஷ் விமானத் தாக்குதல்கள் கோரமாயிருக்கின்றனவென்றும் பிரசங்கம் செய்கின்றன. சில சமயங்களில் பிரிடிஷ் வெடி விமானங்கள் ஜெர்மன் தொழிற்சாலைகளை நாசமாக்குவதில்லையென்றும், அவர்கள் குறிப்பாக அடிக்க சக்தியற்றவர்களென்றும் சொல்லப்படுகிறது. மற்றும் சில சமயங்களில் வெடி விமானங்கள் மாதா கோவில்களையும், ஆஸ்பத்திரிகளையும், அனாதைக் குழந்தைகளின் ஆச்ரமங்களையும் குறிப்பாய்த் தாக்குகின்றனவென்று சொல்லப்படுகிறது. பிரிடிஷ் விமானிகள் கண்மூடித்தனமாக குண்டுகளை வீசுகிறார்களென்று சொல்லிக்கொண்டே ஜெர்மன் தொழிற்சாலைகள் பத்திரமான இடங்களுக்குக் கொண்டுபோகப்படுகின்றன என்றும் சொல்லப்படுகிறது.

**ஸ்டிம்மங், ஹால்டங்.** கோயபல்ஸின் அபிப்பிராயப்படி இருவகைப்பட்ட பேச்சுண்டு. அதாவது சொல்பகாலம், நீண்டகாலம். சில மாதங்களுக்குமுன் ஒரு நகரம் பலமான குண்டுவீச்சுக் குட்பட்டபொழுது இது பிரமாதமல்ல, அற்பமானதென்று துன்பமடைந்தவர்களுக்கு கோயபல்ஸ் ஆறுதல் சொல்லிவந்தான். இப்பொழுது சொல்பகாலமும் நீண்டகாலமும் மறைந்துவிட்டன. வெடிகுண்டு வீச்சுக் குட்பட்டவர்களிடம் ஜெர்மனியில் குண்டு வீச்சுக்குட்படாத அநேக நகரங்களிருக்கின்றன. அவைகள் உங்களுக்கு உதவி செய்யும் என்று கோயபல்ஸ் இப்பொழுது ஆறுதல் சொல்லுகிறுன்.

வி வி வி வி வி

**பஸிபிக் யுத்தம்.** அமெரிக்காவுக்கு ஸ்வதந்திரதினத்தன்று ஒலிபரப்பில் ஆஸ்திரேலியாவின் பிரதம மந்திரியான மிஸ்டர் கர்டின் பின்வருமாறு பிரசங்கம் செய்தார். "எதிரியின் முன்னேற்றம் தடை பெற்றுவிட்டது, ஆஸ்திரேலியாவுக்கு ஏற்பட்ட அபாயம் நீங்கிவிட்டது. எதிரியை முன்னேறித்தாக்கவும் ஆரம்பித்துவிட்டோம் என்று நான் பெருமையுடன் வெளியிடுகிறேன். அமெரிக்கர்களும், டச்சுக்காரர்களும், ஆஸ்திரேலியத் துருப்புகளும் ஜப்பானை பலமாகத் தாக்கப்போகிறுர்கள். இதன் அதிர்ச்சிகள் டோக்கியோவிலும் ஏற்படப்போகின்றன. பஸிபிக் யுத்தத்தை ஒரு கால் பந்து பந்தயத்துக்கொப்பிட்டால் முதல் அரைமணி நேரம் முடிந்துவிட்டதென்று சொல்லலாம். இடை அவகாசத்துக்குப்பின் நாம் துவக்கம் செய்துவிட்டோம். யுத்தத்தை எதிரிகளிருக்கும் பிரதேசங்களில் நடத்தி முடிவான வெற்றி கிடைக்கும் வரையில் நாம் முயலுவோம்.

ஆகையால் தென்மேற்கு பஸிபிக்கில் சமாளிப்பு யுத்தம் முடிவடைந்துவிட்டது. தரை மார்க்கமாகவும், கடல் மார்க்கமாகவும், ஆகாய மார்க்கமாகவும் ஒன்றுபட்ட அமெரிக்க ஆஸ்திரேலியப்படைகள் ஆயிரம் மைல்கள் கொண்ட பரப்பில் தாக்குதலை ஆரம்பித்து ஆஸ்திரேலியாவுக்கு வடக்கேயுள்ள ஜப்பானிய அரை வட்டத்தைப் பிளந்துவிட்டார்கள். சென்ற சில மாதங்களுக்குமுன் குடால்கனுரிலும், பாபுவாவிலும், கொனு பூனுவிலும் நாம் செய்த சண்டைகளின் தொடர்ச்சியாக இவைகள் நடைபெறுகின்றன. இந்த நடவடிக்கை ஐந்து முனைகளில் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. அமெரிக்கப்படைகள் ஸாலமன்ஸிலுள்ள ரெண்டோவாவையும், நியூ ஜார்ஜியாவையும் நியூ கினிக்கு அப்பாலுள்ள ட்ரொபிரிபாண்ட், வுட்லார்க்கையும், நியூ கினியாவில் ஸாலமுவாவுக்குத் தெற்கே 15 மைல்களுக்கப்பாலுள்ள நாஸ்ஸா விரிகுடாவையும் பிடித்துவிட்டன. இதே சமயத்தில் நியூ கினியாவில் மூபோவிலுள்ள ஆஸ்திரேலியப் படைகள் முன்னேறி நாஸ்ஸா விரிகுடாவிலிறங்கியிருக்கும் அமெரிக்கப் படைகளுடன் சேர்ந்துவிட்டன. நியூ ஜார்ஜியாவிலிருந்து டிமார், ஸெலிபிஸ் தீவுகள் வரையில் அதாவது 2,000 மைல்கள் பிரதேசத்திலுள்ள ஜப்பானிய தளங்கள் நமது குண்டுகளால் தாக்கப்பட்டன. இந்த நடவடிக்கைகள் ஜெனரல் மாக் ஆர்தரின் தலைமையில் நடைபெறுகின்றன.

குலா வளைகுடாவில் ஜுலை 4, 5 தேதிகளில் நடந்த கப்பற் சண்டையில் 9 ஜப்பானிய யுத்தக் கப்பல்கள் நாசமடைந்துவிட்டன.

பஸிபிக் முன்னேற்ற யுத்தத்தைப்பற்றி லண்டன் டைம்ஸ் பத்திரிகையில் பின்வருமாறு எழுதப்பட்டிருக்கிறது.

"தென்மேற்கு பிஸிபிக்கில் தைரியமாகவும், துணிவுகரமாகவும் அமெரிக்கப்படைகள் யுத்தம் துவங்கியிருப்பது நமக்கு தைரியமூட்டுகிறது. அமெரிக்கா ஜப்பானியக் கடற்படைக்குச் சவால் விடுத்திருக்கிறது. இந்தச் சவாலை நேசநாடுகள் ரபாலை அடையும்முன் ஜப்பானியர்கள் ஏற்றுக்கொள்ளாவிட்டால், ரபால் கூடிய சீக்கிரம் விழுந்துவிடுமென்பது நிச்சயம்.

நமது சவாலை அவர்கள் ஏற்றுவிட்டால் நடைபெறும் யுத்தம் கோரமாகயிருக்கும். ஜப்பானியர்களை முறியடிக்க முடியாதபோனுல் அதன் விளைவுகள் அதிகமானவையாகயிருக்கும். நமக்கு வெற்றி கிடைத்தால் ஜப்பானின் முடிவுக்கு அஸ்திவாரம் போட்டது போலாகும்.

கூடிய சீக்கிரத்தில் ஜப்பானியக்கடற்படையும் அமெரிக்க கடற்படையும் யுத்தம்செய்ய நேரிடும். அதாவது, ஜப்பான் தன்னுடைய முக்கியமான கடற்படையை உபயோகிக்க வேண்டும். பஸிபிக்கில் அமெரிக்கக் கடற்படை வலுவடைந்துவருகிறது. பஸிபிக் யுத்தமானது விமான பலத்தினுல் மட்டும் முடிவுபெறுமென்றும் கடலாதிக்கமானது இரண்டாம் பக்ஷமான உதவிதானென்றும் சிலர் சுலபமாக நம்பியிருக்கிறுர்கள்.

மூவகைப்பட்ட படைகளும் ஒன்றுபட்டால்தான் யுத்தம் முடிவடையும். விமானப் படையுடன் கடற்படை ஒத்துழைப்பதற்கு இதை விட சிறந்த போர்முனை கிடையாது.

சிறியதும் பெரியதுமான அநேக தீவுகளுள்ள இந்த பிராந்தியத்தில்தான் கடற்படையும் விமானப்படையும் சேர்ந்து வேலை செய்யக்கூடிய சிறந்த தளமேற்பட்டுள்ளது. இந்தப் பிராந்தியத்தில் ஒரு ஸ்தலமும், ஒரு பக்கமும் கடற்படையின் நடவடிக்கையிலிருந்து பத்திரமாக தப்பிக்கமுடியாது.

வி வி வி வி வி

**ருஷ்யா.** 101 நாட்கள் ஓய்வுக்குப்பின் 1943-ம் வருஷத்திய ஜெர்மன் கோடைகால முன்னேற்ற யுத்தம் துவங்கி விட்டது. ஓரல், குர்ஸ்க்கிலிருந்து பேயலோ கிராட் வரையில் 180 மைல்கள் கொண்ட போர்முனையில் மூன்று பகுதிகளாக யுத்தம் ஆரம்பிக்கப்பட்டது. மாஸ்கோவைத் துண்டாடிவிடுவதென்று ஜெர்மனி உத்தேசித்திருக்கிறதென்று தோன்றுகிறது. ஆகிலும் முதல் மூன்று நாள் யுத்தத்திலேயே 1,500 டாங்குகளையும், 700 விமானங்களையும், 30,000 மனிதர்களையும் ஜெர்மனி காவுகொடுத்துவிட்டதிலிருந்து, இந்த எதிர்ப்பு யுத்தம் வெகுகாலம் நீடிக்குமென்று எதிர்பார்க்கமுடியாது.

வி வி வி வி வி

**கக்ஷிக்கூட்டத்தில் பிரசங்கமும் அதின் பொருளும்.** ஜூன்மீ 24-ம் தேதி முஸோலினி தன்னுடைய சாரார்களுக்குச் செய்த பிரசங்கத்தை ஜூலைமாதம் 5-ம் தேதியன்று ரோம் ஒலிபரப்பு நிலயம் வெளியிட்டது. அதை நோக்கினால் இதாலியின் வருங்கால நிலைமையைக்கண்டு முஸோலினி கலக்கமடைந்து விட்டானென்று வெளிப்படுகிறது. அந்தச் சொற்பொழிவில் சபையோர்களிடம் படையெடுப்பு நிச்சயம் என்றும் அது மூன்று வகைப்படுமென்றும், எச்சரிக்கை செய்தான். முதலில் தரைப்படைகள் இறங்குமென்றும் அதைக் கடற்கரையிலுள்ளவர்கள் சமாளிக்கவேண்டுமென்றும், இரண்டாவது, கபடமாக முன்னேறுவதென்றும், இதை உள்நாட்டுப்படைகள் துரத்தியடிக்க வேண்டுமென்றும், மூன்றுவது படையெடுப்பென்றும் இதை நமது முழு படைபலமும் எதிர்க்கவேண்டுமென்றும் அவன் வெளியிட்டான். இந்த யுத்தத்தில் இதாலியர்கள் இருப்பதும் இறப்பதும் நிச்சயம் செய்யப்படும். சரணமடைந்தால், வெட்கமும், ஆயுத பலமின்மையும், தொழிற்சாலைகளின் அழிவும் உண்டாகிவிடும். பாஸிஸ்டு ஆக்ஷியின் வருங்காலப் போக்கைப்பற்றியும் முஸோலினி கவலைகொண்டார். சமீபத்தில் கடுமையான சுத்திசெய்த பின்னரும் பாஸிஸ்டு கக்ஷி ஒன்றுபடவில்லை. ஜனங்களின் மனமார்ந்த ஒற்றுமை வேண்டுமென்றும் கட்டாயப்படை சேமிப்பும், வேலைநிறுத்தம், அனியாய லாபம், போகசாலைகள் இவைகளை ஒழிப்பதும் அவசியமென்றும் முஸோலினி மன்றாடினன்.

வி வி வி வி வி

**அவசியம்.** மார்டினிக் தீவின் உயர்தர கமிஷனரான கடற் தளபதி ராபர்ட் தன்னுடைய எஜமான்களை மாற்றிவிட வேண்டுமென்று ஆலோசனை செய்துமுடித்து, அமெரிக்காவுடன் ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டிக்கொண்டிருக்கிறார். "இரத்த வெள்ளம்" ஏற்படாமல் தடுப்பதற்காகத்தான் இந்த முடிவுக்கு ராபர்ட் வந்தார் என்று ஒலிபரப்பில் சொல்லப்பட்டது. இதன் உண்மை நமக்குப் புலப்படுகிறது. விஷி அரசாங்கத்தினிடம் வெறுப்புற்ற ஜனங்கள் கலகம் செய்து விடுவார்களோ என்ற பீதி யுண்டாகிவிட்டதுபோலிருக்கிறது. ராபர்ட்டின் முடிவுக்கு மற்றொரு காரணமுமிருக்கலாம். அதாவது ஆல்ஜியர்ஸில் சமீப காலத்தில் நிர்மாணிக்கப்பட்ட பிரெஞ்சு தேசிய விடுதலைச் சங்கத்தின் தோற்றம். இவைகளைவிட முக்கியமான காரணம் யாதெனில் மார்டினிக்கிலுள்ள ஜனங்கள் பஞ்சத்திலடிபட்டு புல் பூண்டுகளை உட்கொள்ளும் கதியேற்பட்டதுதான்.

வி வி வி வி வி

**பிரிடிஷ் ஒலிபரப்பு நிலயம்.** சமீபத்தில் ஒரு பிரசங்க ரூபமாக பிரிடிஷ் ஒலிபரப்பு நிலயம் அதன் யுத்த முயற்சிகளைப் பிரசுரம் செய்திருக்கிறது. அதன் சரித்திரம் புகழத்தக்கது. ஒரு நாளைக்கு 71 தடவை 47 பாஷைகளில் அது விஷயங்களை ஒலிபரப்புகிறது. ஜப்பானிய பாஷையிலும் ஒலிபெருக்குவதாக அது உத்தேசித்திருக்கிறது என்று நாம் கேள்விப்படுறோம். ஜப்பானியர்களுக்கு உண்மையான தகவல்களை அறிவூட்டி, ஜப்பானியப் பொய் பிரசாரர்களின் பிரசாரங்கள் மூலமாக மயக்கம் அடைந்திருக்கும் ஜப்பானியர்களுக்கு மயக்கம் தெளியும் படியாகச் செய்வதாகவும் பிரயத்தனம் செய்யப்படும். பிரிடிஷ் ஒலிபரப்பு சிறியதாக ஆரம்பித்து அபிவிருத்தியை அடைந்துவிட்டது. 1939-ம் வருஷத்தில் அது ஆங்கிலத்தில் மட்டும் சாம்ராஜ்ய நாடுகளுக்கு ஒலிபெருக்கிற்று. ஒரு நாளைக்கு ஒரு தடவை சமாசார அறிக்கை வெளியிட்டபொழுதும்

24 மணி நேரம் சேவை செய்வது சுலபமான காரியமில்லை. சூரியன் அஸ்தமனமடையும் பொழுது ஒலிபரப்பைக் கேட்கவேண்டுமென்று எல்லோரும் ஆசைப்பட்டார்கள். பிரிடிஷ் சாம்ராஜ்யத்தில் சூரியன் ஒரு பொழுதும் அஸ்தமானம் அடைவதில்லை. ஒரு வருஷத்துக் குப்பின், லண்டனை ஜெர்மன் விமானங்கள் நொருக்கியபொழுது, ஒலிபெருக்கும் • கருவிகள் பழுதுபட்டும், நிலயம் உடைபட்டும், அதன் வேலைக்காரர்கள் கொல்லப்பட்டும் இறந்த பொழுதும் பிரிடிஷ் ஒலிபரப்பு நிலயம் தன்னுடைய அலுவல்களை இடைவிடாது நடத்தி வந்தது. அது ஒலிபெருக்குமுன் லண்டனிலுள்ள பிக்பன் என்னும் கெடியாரமும் த்வனித்து வந்தது. இந்த நெருக்கடியான நிலைமையில் ஒலிபரப்பு நிலயம் அமெரிக்காவுக்கும், லதீன் அமெரிக்காவுக்கும், வடக்கு, கிழக்கு, தெற்கு ஐரோப்பாவுக்கும் ஒலிபெருக்க ஆரம்பித்தது. 1939-ம் வருஷத்தில் 9 பாஷைகளிலும், 1942-ம் வருஷம் 47 பாஷைகளிலும அது ஒலி பெருக்கி வருகிறது. அது வெளியிட்ட ஒரு செய்தி நிகழ்ச்சியானது. ஆபிரிக்கா, வட அமெரிக்கா, பஸிபிக், கிழக்குப் பிராந்தியம் முதலிய இடங்களுக்கும் அனுப்பப்படுகிறது. ஆக்கிரமிப்பு ஐரோப்பாவுக்கும், ஆசியாவுக்கும் ஒரு நாளைக்கு 120 தடவை ஒலிபெருக்கு கிறது. இவ்விதமாக நேசதேசத்தார்களுக்கு இது ஒரு சிறந்த சேவையாக இருக்கிறது. ஆக்கிரமிப்பு நாடுகளுக்கும், ஒலிபரப்பை தைரியமாகக் கேட்கும் எதிரியின் ஜனங்களுக்கும் உண்மையான தகவல்களை விடுக்கும் கருவியாகவுமிருக்கிறது. பிரிடனுக்காக யுத்தம் நடை பெற்றபொழுது எதிரியின் விமானங்களின் சப்தத்தையும், வெடிகுண்டுகள் வெடிப்பதையும், விமானங்கள் நொருங்கும் சப்தத்தையும், அபாயச்சங்கு த்வனிப்பதையும், விமான எதிர்ப்பு பீரங்கிகளின் சுடு சப்தத்தையும், குண்டுகளால் பாதிக்கப்பட்ட ஜனங்களின் சம்பாஷணை களையும் உதவிப்படையினரின் நடவடிக்கைப் பேச்சுகளையும், எல்லாவற்றையும் ஒன்று விடாமல் உள்ளதுபோலவே ஒலிபெருக்கி வந்திருக்கிறது. ஆனால் நியூயார்க் டைம்ஸ் பத்திரிகை சொல்லியிருப்பதுபோல, கட்டுக்கதைகளைச் சொல்லி அது வீண்காலம் கழிக்க வில்லை. பிரிடிஷ் ஒலிபரப்பு நிலயம் மட்டும் யுத்தத்தின் வெற்றியைப் பெற்றுவிட முடி யாது. ஆகிலும் யுத்தத்துக்கு பிரிடிஷ் ஒலிபரப்பு நிலயம் உதவி செய்திருப்பதுபோல் ஒரு ஸ்தாபனமும் செய்ய முடியாது.

வி வி வி வி வி

**முற்போக்கான ஒப்பந்தங்கள்.** பருத்தி, பஞ்சுத்துணி, நூல் மடிகள், எண்ணெய் வித்து கள், கோதுமை, இவைபோன்ற சாமான்கள் சம்பந்த மாக முன்கூடி ஒப்பந்தங்கள் செய்துகொள்ளக்கூடாதென்று இந்திய நிர்வாகம் போட்டிருக் கும் தடை யுத்தரவுகளை துலக்கி எழுதவேண்டியது அவசியமாகும். ஸ்டாக்குகள், ஷேர்கள் சம்பந்தமாக முன்கூடி ஒப்பந்தம் செய்யக்கூடாதென்று ஏற்கனவே உத்தரவு பிறந்து விட்டது. முன்கூடிய ஒப்பந்தமென்பது, வருங்காலத்தில் குறிப்பிட்ட விலைக்கு சாமான் களை வாங்கவோ விற்பனை செய்யவோ இப்பொழுது எடுத்துக்கொள்ளும் நடவடிக்கையைக் குறிக்கும். இந்த நடவடிக்கை நியாயமானதாயிருக்கலாம், நியாயமற்றதாகமிருக்கலாம். தொழிற்சாலை வைத்திருப்பவர் தனக்கு வேண்டிய பருத்தியை தினசரி கொள்முதல் செய்ய முடியாது. அவன் முன்கூடியே ஒப்பந்தம் செய்துகொள்ளவேண்டியதுதான். இது நியாயமான ஒப்பந்தம். நிரந்தரமான ஜவுளி வியாபாரியில்லாத ஒருவன் இப்பொழுதிருக்கும் விலைவாசிக்கும் வருங்காலத்தில்நிலைவுபெறும் விலைவாசிக்குமுள்ள தாரதம்யத்தை உத்தேசித்து, அநியாய லாபமடையலாமென்று முன்கூடி ஒப்பந்தம் செய்தால் அந்த நடவடிக்கை நியாய மற்றதாகும். இது ஒரு சூதாட்டம். மேல் சொல்லிய சாமான்கள் சம்பந்தமான ஒப்பந்தங் களெல்லாம் பந்தயம் கட்டுவது போல், சூதாட்ட ஜாப்தாவில் சேர்க்கவேண்டியவைகள். யுத்த காலத்தில் விலைவாசிகளின் உயர்வு நிச்சயமென்று அவர்கள் எண்ணம் கொண்டிருக்கி றார்கள். ஆகிலும் மற்ற சூதாட்டக்காரர்கள்போல முன்கூடி ஒப்பந்தம் செய்கிறவர்கள் தங்கள் பொருள்களைச் செலவிட வேண்டியதில்லை. சாமான்களையும் சேமித்துவைக்க வேண்டியதில்லை. அவனுக்குக் கிட்டங்கிகளும் பாங்கியில் மூலதனமும் அவசியமில்லை. சாமான்கள் கொடுக்கவேண்டிய அவசியமில்லை. அவன் வாங்கப்போகும் அல்லது விற்கப் போகும் சாமான்களின் மதிப்பையும் அவன் அறியவேண்டியதில்லை. இது வியாபார சம்பந்தமான ஜாலவித்தை வியாபாரச் சூது. ஸர் ஜெரிமி ரெயிஸ்மான் சொல்லுகிறபடி இது வியாபாரத்தில் ரகசியமான நாசவேலை.

வி வி வி வி வி

**கீர்த்திபெற்ற சிப்பாய் ராஜ தந்திரி யின் மரணம்.** ஜூலை மாதம் 4-ம் தேதியன்று ஜிப்ரால்டரை விட்டு விமானம் புறப்பட்டபொழுது விமானம் நொருங்கிய தால் போலிஷ் பிரதம மந்திரியும் சேனாதிபதியுமான ஜெனரல் ஸிகார்ஸ்கி அகால மரண மடைந்ததைப்பற்றி வருத்தப்படுகிறோம். நேசநாடு களுக்குப் பெரும் நஷ்டம் ஏற்பட்டுவிட்டது. போலந்தும், ஒரு அரிய சிப்பாயையும் ராஜ

தந்திரியையுமிழந்து விட்டது. மிஸ்டர் சர்ச்சில் வெளியிட்ட பிரகாரம் இறந்தவர் நூற்றுண்டுகளாக கஷ்டத்துக்கு உட்பட்ட போலிஷ் தேசத்தின் முன்னேற்றத்துக்குக் காரணமான ஊக்கத்தின் வடிவென்றும், உருவமென்றும் அவரைச் சொல்லலாம்.

வி வி வி வி வி வி

**ஸ்டாண்டர்ட் துணி.** புதுக்கோட்டை ஸமஸ்தானத்துக்கு 1,100,000 கெஜம் ஸ்டாண்டர்ட்துணி ஆறு மாதங்களுக்கொருதரம் ஸப்ளை செய்யப்படும். இதன் விநியோகம் கோவபரேடிவ் சங்கங்கள் கையில் ஒப்படைக் கப்படும்.

---

# சீர்கேடு செய்தல்.

(டெயிலி மெயில் பத்திரிகை).

விமானத் தாக்குதல்களினின்றும் விளைந்த நாசங்களைப்பற்றிய படங்கள் அநேகம் பிரிடனில் பிரசுரிக்கப்படுகின்றன. இவைகளுக்குள் டஸ்ஸல்டார்புக்கு ஏற்பட்ட நஷ்டம் அதிக பலமானது. இது நஷ்டமல்ல, அழிவு என்று சொல்லவேண்டும். இது விமானத் தாக்குதல் மட்டுமல்ல விமானச் சண்டையென்ற பதமும் பொருத்தமல்ல. இரண்டு சேனைகள் கடும்போர் செய்தபின் ஏற்படும் நஷ்டங்களைவிட, ஒரு மணி நேரம் வெடிவிமானங் களின் குண்டு வீச்சுக்குள்ளாகும். ஒரு பெரிய நகரம் அதிக நஷ்டமடைந்துவிடுகிறது. இயற்கையாக ஏற்பட்ட ஒரு பிரளயத்தின் விளைவுக்கு சமானமாக இந்த நஷ்டத்தைச் சொல்லலாம்.

கொடுமை பொருந்திய நமது எதிரிகளை வெடிகுண்டுகளால் தாக்கும் முறைகளை நாம் பலமாகக் கையாளவேண்டுமென்றாலும் இந்த முறையின் கோரமான விளைவுகளையும் நாம் மதித்துப் பார்க்கவேண்டும். எதிரிகள் இதன் சக்தியையறிந்து தயையன்னியில் நமது பேரில் குண்டுகளை பிரயோகம் செய்தார்கள். யுத்தத்தில் குண்டு வீசுவது புதிய சிறந்த முறையென்றும் அதை அவசியம் கையாளவேண்டுமென்றும் நேசநாட்டிலுள்ள புத்திசாலி களும் கண்டுபிடித்தார்கள். நாம் இப்பொழுது இறுதித் தாக்குதலுக்கு முன்னதாக எதிரியின் பிரதேசங்களை நொருக்கிவருகிறோம். சென்ற யுத்தத்திலும் தரைப்படைகள் முன்னேறுவதற்குமுன் இதேமாதிரியாக எதிரியின் வலிமையைக் குறைக்கும் முறைகளையும் நாம் கையாண்டோம். தங்களுடைய சிப்பாய்களின் உயிரைக் காப்பாற்றும் பொருட்டு, எதிரியை நசுக்கவும் அவன் மனோநிலையைக் கலக்கவும் நேசநாடுகள் ஆயுத பலத்தை விசேஷமாக உபயோகிப்பதுபோலிருக்கிறது. இதனால்தான் டேயிஸ்பர்க், டஸ்ஸல்டார்ப், கிரெபெல்ட், மல்கீம் முதலிய இடங்கள் இடைவிடாது அழிக்கப்படுகின்றன. ஆகையால்தான் முக்கியமான நகரங்களும் தரைமட்டமாக்கப்படுகின்றன.

இந்தத் தாக்குதல் இயந்திரங்களால் மட்டும் நடத்தப்படுகிறதில்லையென்று ஞாபகப் படுத்திக்கொள்ளுங்கள். 30, 40 வெடிவிமானங்கள் நஷ்டமாகிவிட்டனவென்றால் நூற்றுக் கணக்கான தேர்ச்சி பெற்ற மனிதர்களின் நஷ்டமும் ஏற்பட்டுவிட்டதென்று நினையுங்கள். பாதுகாப்பில்லாத ராட்டர்டாம், வார்ஸா, பெல்கிரேட் போன்ற இடங்களின்பேரில் இவர்கள் வெடிகுண்டுகளை வர்ஷிப்பதில்லை. ஏராளமான விமான எதிர்ப்பு பீரங்கிகளின் குண்டு வீச்சையும் இரவுச் சண்டை விமானங்களின் எதிர்ப்பையும் சமாளித்துச் சென்று வெடி குண்டுகளைத் தள்ளிவிட்டு மறுபடியும் விமானங்கள் திரும்பிவரவேண்டும். விமானிகள் உயர்ந்த தைரியசாலிகள்.

ஜெர்மன் விமானப்படை முதல் முதலில் நம்மைத் தாக்குவதற்குச் செய்த அட்டூழியங் களுக்கு சிக்ஷை ரூபமாக நாம் செய்துவரும். விமானத் தாக்குதலைக் கண்டு எதிரிகள் புகார் செய்கிறார்கள். எதிரிகளோடு ஒத்துப்பாடும் அநேக முட்டாள்களும் நமது நாட்டி லிருக்கிறார்கள். அவர்களின் பச்சாத்தாபத்தை நாம் ஏற்றுக்கொள்ளலாமே ஒழிய அவர்களின் கோழைத்தனத்தை நாம் ஒப்புக்கொள்ள முடியாது. நாம் இந்த முறையைக் கையாளா விட்டால் நாம் நாசமாகி விடுவோம். நாம் இப்பொழுது சும்மாவிருந்துவிட்டு, அச்சு வல்லரசுகளின் விமானபலமும் விருத்தியடையும்படி செய்து விடுவோமாகில், வருங்காலத்தில் நாகரீகம் மறைந்துவிடும். யார்க் பிரதம பாதிரியார் சொன்ன பிரகாரம் ராணுவ லக்ஷியங்களை வெடிவிமானங்களால் தாக்குவதற்கு சரியான ஞாயமிருக்கிறது. யுத்தம் சீக்கிரம் முடிவடை வதுடன், ஆயிரக்கணக்கான மக்களின் ஜீவனும் காப்பாற்றப்பட்டுவிடும்.

# வெடிகுண்டு வீச்சு.

ஜெர்மன், இதாலிய நகரங்களின்மேல் வெடிகுண்டுகள் வீசப்படுவதை கிருஸ்துவர் என்ற முறையில் நான் ஆக்ஷேபிக்கவேண்டுமென்று எனக்கு அநேக கடிதங்கள் வந்துகொண்டிருக்கின்றன:

யுத்தம் கொடுமையானது. ஆகாயத்திலிருந்து யுத்தம் செய்வதும் கொடுமையானது தான். ஆகாயத்திலிருந்து விமானமூலம் வெடிகுண்டுகளை வர்ஷிக்கும் யுத்தமுறையை பரிகரிக்க வேண்டுமென்று எல்லோரும் விரும்புகிறார்கள். ஏனென்றால் வெடிகுண்டுகளின் வீழ்ச்சியிலிருந்து யுத்தத்தில் ஈடுபட்டவரும், பொதுமக்களும் எல்லோரும் கஷ்டமடைகிறார்கள். தற்காப்பில்லாத ராட்டர்டாம், பெல்கிரேட் முதலிய முக்கியமான நகரங்களை ஜெர்மானியர் அதிகக் கடுமையாக வெடிகுண்டுகளால் தாக்கி, ஆயிரக்கணக்கான மக்களை அழித்து அதன் மூலம் பொதுமக்களின் மனதைக் கலங்கும்படி செய்யவும் முயன்றார்கள்.

நேசதேசத்தார்கள் இவ்விதமான வெடிகுண்டு வீசும் முறைகளைக் கையாளவில்லை. எதிரியின் ராணுவ பலத்தை அழிப்பதற்காக ராணுவ முக்கியமுள்ள லக்ஷியங்களைத்தான் நேசநாடுகள் தாக்குகின்றன. சில பொதுஜனங்களுக்கு கஷ்டமேற்படுவதும் தவிர்க்க முடியாத காரியம்.

### இதற்கு நியாயமிருக்கிறது.

வெடி குண்டு வீசுவதற்கு நியாயமுண்டு. யுத்தம் சீக்கிரம் முடிவடைவதுடன் இந்த முறையினால் ஆயிரக்கணக்கான ஜனங்களைக் காப்பாற்றிவிடலாம். வெடிகுண்டு வீசும் முறையை நிறுத்திவிடவேண்டுமென்று சொல்லுகிறவர்களெல்லாம், நமது துருப்புகளில் அநேகர் உயிர் துறக்கவேண்டிய முறையையும், விடுதலைபெறும் காலத்தை ஒத்திவைக்கும் கொள்கையையும் சிபார்சு செய்கிறார்கள். விடுதலை சீக்கிரம் கிடைத்தால்தான் நாஸிகளின் அமுலுக்குட்பட்டிருக்கும் அநேக மக்கள் உயிர் துறக்காமலும் வதைக்குட்படாமலும் காப்பாற்றப்படுவார்கள்.

மனித வாழ்க்கையில் எது சரியான மார்க்கம், எது அக்ரமம் என்ற பாகுபாடு செய்ய முடியாது. இரண்டு கெடுதலுக்குள் எது குறைவானதென்றுதான் நாம் ஆராய்ச்சி செய்ய வேண்டும். சமாதானம் வேண்டுமென்று மன்றாடிக்கொண்டிருக்கும் ஆயிரக்கணக்கான மக்களைத் தியாகம் செய்வதையும், அடிமைப்பட்டிருக்கும் மிலியன்கள்கணக்கான மக்களை விடுதலை செய்வதில் தாமதம் செய்வதையும்விட யுத்த வெறிகொண்ட ஜெர்மனியை வெடி விமானங்களால் தாக்குவதுதான் சிறந்த முறையாகும்.

---

# பர்மா யுத்தம்பற்றி பிரிகேடியர் வின்கேட்.

தூரக்கிழக்கிலுள்ள காடுகளில் யுத்த தந்திரத்தில் ஜப்பானியர்கள்தான் நிபுணர்களென்றும், இதற்கு எதிரிடையாக நேசதேசங்கள் ஒன்றும் செய்ய முடியாதென்றும் ஜப்பானியர்கள் நினைத்தார்கள். அவர்களுக்கு இயற்கையான தீர்க்காலோசனையுடனும், முயற்சியுடனும் நவீன யுத்த முறைகளில் வனாந்திரங்கள் எவ்வளவு உபயோகப்படுமென்பதை நன்றாய் ஆராய்ச்சி செய்து தங்களுடைய சிறந்த முறைகளை தேர்ச்சிபெற்ற துருப்புகளுக்கும் ஒத்திகை மூலமாகவும் கற்றுக்கொடுத்திருக்கிறார்கள். சமக்ஷம ஏற்பாடு நடைபெறப்போகும் ஆசியா கண்டத்தில் நிலைபெற்றுவரும் யுத்த தந்திரங்களைச் சாதுர்யமாகவும் சகிப்புத்தன்மையுடனும் ஜப்பானியர்கள் நடத்திவருவதுபோல் சுகவாசிகளும் அறிவீனர்களுமான நேசதேசத் துருப்புகள் நடத்த முடியாதென்று ஜப்பானியர்கள் பீத்திக்கொள்ளுகிறார்கள். ஜப்பானிலிருந்து இந்தியா வரையிலும், மஞ்சூரியாவிலிருந்து ஆஸ்திரேலியா வரையிலும், அடர்ந்த காடுகளும் மலைத்தொடர்களும் நிரம்பியிருப்பதால், நவீன யுத்த தந்திரத்தில் ஒன்றான கபடமாக முன்னேறுதல் என்ற முறைக்கு எல்லாவிடங்களிலும் சௌகரியமேற்பட்டிருக்கிறது.

அவர்களின் எண்ணங்கள் தவறானவை. காடுகளில் கபடமாக முன்னேறும் முறைகளில் ஜப்பானியர்களைவிட அதிக சக்திவாய்ந்தவரென்று பிரிடிஷ் சிப்பாய் ருஜூப்படுத்தியிருக்கிறான். இதற்குக் காரணம் சிப்பாயின் முன்னோர்களின் குணங்களெல்லாம் அவனிடம் பொருந்தியிருப்பதுதான். தீர்க்காலோசனை, தன்னால் முடிந்தவரையில் திறமையுடன் வேலைசெய்வது, தன்னம்பிக்கை, தனிப்பட்ட முறையில் வேலைசெய்யும் சக்தி, இவைபோன்ற குணாதிசயங்கள்

அவனிடம் காணப்படுகின்றன. தனிப்பட்ட முறையிலும், தைரியத்துடன் சண்டைபோட வேண்டிய சந்தர்ப்பங்களிலும் வனாந்திர யுத்தங்களில் இந்தியச் சிப்பாயும் ஜப்பானியர்களைத் தோற்கடித்திருக்கிறார்கள்.

இந்த உண்மைகளை மதித்து பீல்ட் மார்ஷல் வேவல் எனக்கு 1942-ம் வருஷம் இலையுதிர் காலத்தில் ஒரு கட்டளையிட்டார். எதிரி படை வரிசைகளுக்குப் பின்புறம் வெகுதூரம் வரையில் கபடமாக முன்னேற லாயக்கான படைகளைச் சேர்த்து அவர்களுக்குப் பயிற்சியளிக்கவேண்டுமென்று சொல்லப்பட்டது.

வேவலின் திட்டத்தைப் பூர்த்திசெய்ய எதிரியுடையதைக் காட்டிலும் உயர்வானதும், புதிய முறையில் தாக்குதல் செய்யச்கூடியதும், இதுவரையில் கேள்விப்படாத அலுவல்களைச் செய்வதற்கும் சிலாக்யமான விமானப்படை அவசியமாகயிருந்தது. நம்மிடம் அப்பேர்ப்பட்ட விமான பலமிருந்தது. பிரிடிஷ் விமானப்படை நமக்கு சதாகாலமும் உதவி செய்தது.

மேலும், எதிரியைத் தாக்கும் தந்திரத்தில் நாங்கள்தான் சிறந்த படைகளென்று மதித்து ஒவ்வொரு பகுதிக்கும் பிரிடிஷ் விமானப்படையின் உதவியளிக்கப்பட்டது. அதற்கு ஆபீஸர்களும் நியமிக்கப்பட்டார்கள். விமானப்படையின் ஒத்தாசையினால்தான் நம்முடைய நிகழ்ச்சிகள் வெற்றிகரமாக முடிவடைந்தன.

ஜப்பானியர் ஆக்கிரமித்திருக்கும் பர்மாவுக்குள் நுழைந்து ஜப்பானுக்குத் தீங்குசெய்வதற்குத் தயாராகிய இந்தப் படைபலத்தின் அம்சங்களைப்பற்றிக் கூறுவோம். இந்தப் படையில் பொறுக்கி எடுத்தவர்கள் சேர்க்கப்படவில்லை. இதில் சாதாரணமான பிரிடிஷ், இந்திய காலாட்படையாளரும், ஸாப்பர்ஸ்களும், அடையாளம் காட்டுவோரும் இன்னும் அநேகரும் சேர்ந்திருந்தார்கள். ஒவ்வொரு பகுதியிலும் பர்மிய சிப்பாய்களும் அநேகரிருந்தார்கள். அவர்களில்லாமல் இந்த நடவடிக்கைகளே நடைபெற்றிருக்கமுடியாது.

தொழிற்சாலைகளிலும், ஒர்க்ஷாப்புகளிலும் வேலைசெய்வதற்கு லாயக்குள்ளவர்களும் தேர்ச்சிபெற்றவர்களுமான இப்பேர்ப்பட்ட சாதாரணமான துருப்புகள் டார்ஸானின் அதிசயச் செய்கைகளையும் பிரமிக்கச் செய்யும்படியான அரியசெய்கைகளைச் செய்யும் சக்தியையும், எதிரி குறுக்கிட முயன்றபொழுது அநேக தடவைகளில் பலமாக அவனைத் தாக்கி, அவனைப் பின்வாங்கி ஓடும்படிக்கும் மறுபடி முன்னேற நடுநடுங்கும்படிக்கும் செய்த சாமர்த்தியத்தையும் எவ்விதம் பெற்றுவிட்டார்கள்.

பொதுவாகச் சொல்லும்பொழுது, நமது படையிலுள்ள ஒரு சிப்பாயின் தீரத்தை சமாளிக்க எதிரியின் 10 அல்லது அதற்குமேற்பட்ட துருப்புகள் முயன்றுவந்தன. இதற்குக் காரணம் யாதெனில், புத்திசாலித்தனமும் தன்னம்பிக்கையும் உள்ளவர்கள் கிடைத்துவிட்டால் அவர்களுக்கு அவசியமான குறைவான பயிற்சி அளித்தல் போதுமானது. அவர்கள் ஒரு படையை நிர்வகிக்கும் சிறிய உத்தியோகஸ்தரின் அந்தஸ்தையும் ஆடுமாடுகள்போல் புத்தியில்லாமல் யுத்தம் செய்யும் அச்சுநாட்டுத் துருப்புகளை முறியடிக்கும் சக்தியையும் பெற்றுவிடுகிறார்கள். ஜப்பானியர்கள்போல் ஸ்வாரஸ்யமற்ற, மகிழ்ச்சியற்ற ஆத்ம ஹத்தி செய்யத் துணியாதபோதிலும் பிரிடிஷ் சிப்பாயின் புத்திசாலித்தனத்துக்கும் பகுத்தறிவுக்கும் சந்தர்ப்பமளித்தால் அவன் எதிரியை நிச்சயமாக முறியடித்துவிடுவான்.

## படையின் தீரம்.

இந்தப் படை என்னசெய்து முடித்தது. அதின் எல்லா நடவடிக்கைகளையும் வெளியிட முடியாதபோதிலும் சில விஷயங்களை வெளியிடலாம்.

பிரிடிஷ் படைகளும், ஜப்பானியப் படைகளும் ஒன்றை ஒன்று எதிர்த்து இருகரையிலும் நின்ற சிண்ட்வின் நதியை பிப்ரவரி மாத ஆரம்பத்தில் நாம் தாண்டினோம். வெற்றிகரமாக ஒரு போலிச் சண்டை போட்டு எதிரியின் கவனத்தை வேறுபக்கம் திருப்பிவிட்டு வடக்கிலும் தெற்கிலுமுள்ள இருப்புப்பாதைகளை நோக்கி ஜப்பான் ஆக்கிரமித்திருக்கும் நாடுகள் வழியாக முன்னேறினோம்.

இந்த நடவடிக்கைகளில் ஒவ்வொரு தடவையிலும் படைகள் 10,000 சதுரமைல்கள் கொண்ட பிரதேசத்தை ஆக்ரமித்தன. வேகமாக முன்னேறிவந்ததால் நமக்கு ஸப்ளைகள் கொண்டுவரும் விமானப்படைக்கு ஒரு புதிய வேலையை நாம் கட்டளையிட்டோம். இந்த வேலையை அவர்கள் திருப்திகரமாகச் செய்து முடித்தார்கள்.

மார்ச்சு மாத ஆரம்பத்தில் மாண்டலேயிலிருந்து மிட்கினாவுக்குப் போகும் இருப்புப் பாதையை நமது துருப்புகள் அடைந்தன. அந்தமாதம் மத்திவரையில் அவ்விடத்தில் தாக்குதல் நடைபெற்றது. இருப்புப் பாதையை நாம் நாசம் செய்துவிட்டுப் புறப்பட்டோம். ஜப்பானியர்கள் அதற்குப்பின் அதை உபயோகப்படுத்த முடியவில்லை.

எதிரிகள் எதிர் பாராதவண்ணம் நமது படைகள் முன்னேறி, ஐராவதி நதியைக் கடந்து ஜப்பானியர்களின் முக்கிய ஸ்தானங்களுக்கு சமீபத்தில் தெற்கு வெளிகளில் தோன்றிற்று. இங்கே சில நடவடிக்கைகளைச் செய்தோம். இதற்குள்ளாக எங்களைத் தாக்க எதிரி பலமான சேனையைத் திரட்டிவிட்டான். நாங்கள் படை வரிசைகளைக் கலைத்துவிட்டு, சிறிய பகுதிகளாக எங்கள் மூகாமுக்குத் திரும்பிவந்தோம்.

எங்களில் எல்லோரும் அநேகமாகத் திரும்பி வந்துவிட்டோம். புத்தியின்மையையும், முரட்டுத்தனமும் பசிப்பிணியால் வருந்தும் ஜப்பானியர்களை மறுமுறை தாக்கும் சந்தர்ப்பம் எப்பொழுது வாய்க்குமென்று நாங்கள் ஆவலுடன் எதிர்பார்த்து வருகிறோம். சிலர் திரும்பியே வரமாட்டோம். ஆகிலும் தேசத்துக்காக அவர்கள் ஒரு சிறிது பாடுபட்டிருக்கிறார்கள். யுத்தத்தில் ஒரு புதிய தந்திரத்தை அவர்கள் காரியாம்சையில் நடத்திக் காட்டியிருக்கிறார்கள். இவர்களின் தியாகம் வியர்த்தமல்ல.

### பர்மியர்களுக்குப் புகழுரை.

எல்லா யுத்த அரங்கத்திலும் யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் மனித வர்க்கத்தார் நேச தேசங்களின் யுத்த நோக்கங்கள் எவ்வகைப்பட்டதென்றும், கடுமையானதும், கோரமானதுமான நோக்கங்களுள்ள அச்சு நாட்டாரின் கொள்கைகளைவிட இவைகள் சிறந்தவையென்றும், அச்சு நாடுகளின் தோல்வி ஏற்பட்டால்தான் மனிதனின் ஸ்வதந்திரமும், ஸ்வதந்திர வாழ்க்கையும் ஏற்படுமென்றும் உணர்ந்துவிட்டார்களென்று ஞாபகப்படுத்திக்கொள்ளுங்கள். இந்த உண்மையை அறிந்ததால்தான் நாம் எதிரிகளுக்குப்பின் கபடமாக ஊடுருவிச் செல்லவும் எதிரியைத் தாக்கவும் நமக்கு உத்சாகம் ஏற்பட்டது.

பொதுவாகப் பர்மியர்களுக்கும் விசேஷமாக நம்முடன் தைரியத்துடனும், அன்புடனும் ஒத்துழைத்த பர்மா ரைபிள் படைக்கும், நமக்குக் கிடைத்த வெற்றியின் பெருமை உரித்தாகும். இதேவிதமாக எல்லா இடங்களிலும் நமக்கு வெற்றி கிடைக்குமென்று நம்புகிறோம்.

---

## பிரிடிஷ் சிப்பாய்க்கு அமெரிக்க தேசத்தவரின் புகழுரை.

(டெயிலி டெலகிராப் பத்திரிகை).

வட ஆபிரிக்காவில் பிரிடிஷ் துருப்புகளின் தீரத்தைப் பற்றிய ஸ்வாரஸ்யமான ஒரு விருத்தாந்தம், நியூயார்க்கிலுள்ள ஸ்டாடன் தீவிலிருந்து 22 வயதுள்ள ஒரு அமெரிக்கர் எழுதிய கடிதத்தில் காணப்படுகிறது. இக்கடிதம் நியூயார்க்கில் வெளியாகும் ஹெரால்ட் ட்ரிபூன் என்னும் பத்திரிகையில் பிரசுரம் செய்யப்பட்டிருக்கிறது. கடிதம் வரைந்தவரின் பெயர் வெளிவரவில்லை. ஆகிலும் அவர் சென்ற நவம்பர் மாதத்தில் எல் அலமீனுக்குச் சமீபத்தில் அமெரிக்கத் துருப்புகளுடன் வசித்தவரென்று வெளியாகுகிறது.

அவர் எழுதியிருப்பதாவது.

"பிரிடிஷ் ஸோல்ஜரைப்பற்றி எழுதவேண்டுமென்று அபிப்பிராயப்படுகிறேன். நான் அவர்களைப்பற்றி மிகையாகப் பேசுவதாக எண்ணவேண்டாம். இது என்னுடைய அபிப்பிராயம் மட்டுமல்ல. பிரிடிஷாருடன் கலந்து நின்று போர் புரிந்திருக்கும் ஒவ்வொரு அமெரிக்கருடையவும் இங்கே அநேக வருஷங்களாக இருந்துவரும் பத்திரிகைநிருபர்களுடைய அபிப்பிராயமும் சேர்ந்ததுதான். நான் ஆங்கிலேயராக மாறிவிட்டேனென்று ஜனங்கள் தப்பெண்ணம் கொள்ளவேண்டாம். அவ்விதமாக நான் மாறிவிடவில்லை. பிரிடிஷ் ஸோல்ஜர் போல் சிறந்த தைரியமாக யுத்தம் செய்பவர் இவ்வுலகில் ஒருவரும் இருக்கமுடியாது.

"மனோதைரியத்திலும், விடாமுயற்சியிலும் பிரிடிஷ் ஸோல்ஜரைவிட உயர்வானவனே கிடையாது. பிரிடிஷாரின் யுத்த சாமர்த்தியத்தை அறிவதற்கு எல் அலமீனில் முன்னேற்ற யுத்தம் ஆரம்பிப்பதற்கு முன் ஒரு இரவு நடைபெற்ற நிகழ்ச்சிகளை நான் ஞாபகம் மூட்டுகிறேன். தெற்குப் பகுதியில் சுரங்க வெடிகள் நிரம்பிய மூன்று தளங்களுக்குப்பின் ஜெர்மன் துருப்புகள் பத்திரமாக உட்கார்ந்திருந்தன. சுரங்க வெடிகளைத் தாண்டிச் செல்ல நாம் பிரயத்தனம் செய்தோம். சுரங்க வெடிகளுக்கு இடையிலுள்ள மார்க்கமாக டாங்கிகள் சென்று எதிர் பக்கத்திலுள்ள தளங்களில் பரவி மறுபடி முன்னேற வேண்டுமென்று யோசனை செய்யப்பட்டது. எங்களுக்குப் பின்னால் லேசான காலாட்படைகள் வந்துகொண்டிருந்தன. சுரங்க வெடிகளுள்ள பிரதேசங்கள் வழியாக டாங்கிகள் பத்திரமாகப் போய்ச் சேர்ந்தன. நானும், டாக்டர் ஒருவரும் டாங்கிகளுக்குப் பின்னால் 300 கஜங்கள் அகலமுள்ள ஒரு வெளிக்கப்புறமிருந்தோம்.

"திடீரென்று ஜெர்மன் துருப்புகள் தங்களுடைய பீரங்கிகளை உபயோகிக்க ஆரம்பித்தார்கள். 88 போபர் துப்பாக்கிகளையும், கனமான பீரங்கிகளையும், சிறிய ஆயுதங்களையும் உபயோகிக்க ஆரம்பித்தார்கள். டாங்கிகள் பின்வாங்கும்படி நேரிட்டது. ஏராளமான ஆள் சேதம் ஏற்பட்டது. இதைச் சரிப்படுத்த எங்களால் முடியவில்லை.

"அப்பொழுது பீரங்கி வேட்டுகளுக்கு மத்தியில் பிரிடிஷ் காலாட்படை வந்து சேர்ந்து முன்னேற ஆரம்பித்தது. அம்மாதிரியான நடவடிக்கையை இதுவரையில் நான் கண்டதில்லை.

"துப்பாக்கிகளை நேர்முகமாகக் குறிவைத்துக்கொண்டு நிமிர்ந்த தலையுடன் முன்னோக்கிக் கொண்டு அவர்கள் முன்னேறினார்கள். அநேகர் தலையையிழப்பதையும் கைகால்கள் சேதப்பட்டதையும் கண்ணுற்றேன். அவர்கள் வெற்றிகரமாக முன்னேறிவிடுவார்களென்ற நம்பிக்கை ஏற்படவில்லை. ஆகிலும் அவர்கள் விடாமுயற்சியுடன் வரிசை வரிசையாக குதூகலமாகப் பாடிக்கொண்டு முன்னேறினார்கள். அவர்கள் பீரங்கிகளின் குண்டு வீச்சுகளிலிருந்து சிரமப்படுவதை மட்டும் தான் காணலாமென்று நினைப்பீர்கள். சில சமயங்களில் குண்டுகளின் சப்தம் நின்று விடும்பொழுது பிரிடிஷ் துருப்புகளின் கோஷத்தையும் நாம் கேட்கக்கூடும். இவர்களைப் போல் நான் ஒருவரிடமும் இவ்வளவு பெருமை கொண்டதில்லை. மனித சமூகத்தைப்பற்றியே நான் விசேஷ பெருமைகொண்டேன்.

"அன்று என்னுடனிருந்த டாக்டர் குண்டுகளுக்கிறையானார். அவருக்குப் பதிலாக வந்தவரும் காயமடைந்தார். அன்று இரவு நிலைமை மிகவும் பரிதாபமாகயிருந்தது. ஆகிலும் எதிரியின் பீரங்கிக் குண்டுகளையும் பொருட்படுத்தாது உத்சாகமாகப் பாடிக்கொண்டு துப்பாக்கிகளுடனும் சனிபன்களுடனும், தைரியத்துடனும் முன்னேறின, பிரிடிஷ் துருப்புகளின் தோற்றம் என முன்னால் நிற்கின்றது. இந்த சம்பவத்தையும் இதுபோன்ற சிலவற்றையும் கண்ணுறக்கண்டபின், பிரிடிஷ் ஜோல்ஜரைப் பற்றி எவரும் குறைகூறினால் அதை நான் சகிக்கமாட்டேன்."

---

## நார்வேயில் ஜெர்மனியின் தற்காப்பு ஏற்பாடுகள்.

மத்தியதரைக்கடல் பிரதேசத்தில் ஏற்பட்ட மாறுதல்களிலிருந்து ஐஸ்லாந்திலும் வடக்கு ஸ்காத்லாந்திலும் நார்வேயைத் தாக்குவதற்கு பாய்ச்சல் ஸ்தலங்கள் ஏற்படுத்த வேண்டிய அவசிய மேற்பட்டிருக்கிறது. ஜெர்மன் ராணுவ அதிகாரிகள் இதை நன்றாய் அறிந்திருக்கிறார்கள். சமீப காலத்தில் கிடைத்த தகவல்களிலிருந்து ஜெர்மனி தெற்கு ஐரோப்பாவின் தற்காப்புகளை பலப்படுத்திவருவதில் ஈடுபட்டிருக்கிறதென்றாலும் நார்வேயை நேச தேசங்கள் தாக்குவதும் சம்பாவிதமென்று அவர்கள் அறிந்து சங்கடப்படுகிறார்கள். இப்பொழுது நார்வேயுக்கு தற்காப்பு முஸ்தீப்புகள் அதிதுரிதமாகக்கொண்டு போகப்படுவதிலிருந்து வடக்குப் பிராந்தியத்தில் தற்காப்புகளை அலக்ஷியம் செய்யக்கூடாது என்று ஜெர்மனி நிச்சயித்துவிட்டது.

### ஜெர்மனியின் தற்காப்பு முறைகள்.

ஐரோப்பாவிலேயே மிகவும் பெரியதான ஒரு விமான தளம் டிராண்ட்ஹீமில் துரிதமாக அமைக்கப்படுகிறது. நார்வேயின் எல்லா பாகங்களிலும் கடற்கரைத் தற்காப்புகள் அதிகமாக நிர்மாணிக்கப்படுகின்றன. கடற்கரையில் சுரங்க வெடிகளும் ஏராளமாகப் பாவப்பட்டிருக்கின்றன. அதற்குத் தெற்கே நூற்றுக்கணக்கான மைல்களுக்கப்பாலிலுள்ள ஆஸ்லோ வளைகுடாவில் லார்விக் நகரத்தின் தெருக்களில் சிறிய தற்காப்பு அரண்கள் கட்டப்படுகின்றன. நடமாட்டம் அதிகமாக உள்ள தெருக்களில் முள்ளுக்கம்பிகளும் இதர தற்காப்பு முஸ்தீப்புகளும் அமைக்கப்பட்டு போக்குவரவு தடை செய்யப்பட்டிருக்கிறது. ஆஸ்லோவுக்குத் தெற்கே 20 மைல்களுக் கப்பாலிலுள்ள டாப்ரெக் என்னுமிடத்தில் ஹஸிர்க் அரணிலுள்ள பீரங்கிப் படையினருக்குத் தெளிவாக பிரதேசத் தோற்றம் ஏற்படுவதற்காக காடுகள் அழிக்கப்படுகின்றன.

நார்வேயிலுள்ள டாட் சங்கமானது தன்னுடைய சிரமமான அலுவல்களை நடத்தி வருகிறது. நார்வேயின் கடற்கரையின் அதிக நீளத்தினாலும், விசேஷ அமைப்பினாலும் அங்கே ஜெர்மனி தற்காப்பு செய்வதிலிருந்து ஜெர்மனியின் தொழிலாளர்கள், முஸ்தீப்புகள் இவைகளுக்குக் குறைவு ஏற்பட்டுவிட்டது. மற்ற ஆக்கிரமிப்பு நாடுகள் போலில்லாமல் நார்வேயிக்குத் தொழிலாளர்கள் வெளியிலிருந்து அனுப்பப்படுகிறார்கள். ஜெர்மனிக்கு அங்கிருந்து நார்வேயின் வேலைக்காரர்கள் வெளியேறவில்லை.

## தாக்குதலுக்குச் சாதகமான அம்சங்கள்.

நார்வேயைத் தாக்கவேண்டுமென்று நேசதேசத்தார்கள் தீர்மானம் செய்வதற்கு, தூர வடக்கிலுள்ள ருஷ்யத் துருப்புகளுடன் சேர்ந்துகொள்ளலாமென்பதும், ஆர்கேஞ்சலுக்கும், மர்மான்ஸ்க்கும் சாமான் கொண்டுபோகும் பிரிடிஷ் அமெரிக்க துணைக் காவல் கப்பல்களுக்கு ரக்ஷணை செய்யலாமென்பதும், முக்கியமான நோக்கங்களாகும். வடக்கு நார்வேயிலுள்ள விமான தளங்களிலிருந்து ஜெர்மானியர்கள் ருஷ்யாவுக்குச் செல்லும் நேசதேச சாமான் கப்பல்களைத் தாக்கி வந்திருப்பதால் அந்தப் பிரதேசம் யுத்தத்தில் முக்யத்வம் பெற்றுவிட்டது. நார்வேயில் வடக்குக்கோடி மாகாணமான பின்மார்க் மாகாணம் செம்படையிருக்கும் ஸ்தலத்திலிருந்து 20 மைல்களுக்கப்பால் தானிருக்கிறது. இந்த இடத்தில் ருஷ்யர்களுக்கு ஒரு நஷ்டமும் ஏற்படவில்லை. நார்வேயிலுள்ள தேசாபிமானிகள் தங்களாலியன்ற அளவு ருஷ்யர்களுக்கு ஒத்தாசை செய்ய முயன்றுவருகிறார்கள்.

பின்லாந்து ஜனங்களுடன் நேர்முகமாகத் தொடர்பு ஏற்படுத்தி, அவர்களுக்கு பிரிடனும் அமெரிக்காவும் உணவுப் பொருள்களை ஸப்ளை செய்யும் என்று வாக்குறுதியும் செய்தால், அவர்கள் யுத்தத்தை நிறுத்திவிடக்கூடும். அதிலிருந்து ருஷ்யப் போர்முனையின் லெனின் கிராட் பகுதியில் விசேஷ மாறுதல்களும் உண்டாகிவிடும்.

## ஜெர்மனியின் இரும்பு ஸப்ளை.

வடக்கு நார்வேயைத் தாக்குவதில் மற்றொரு பிரயோஜனமும் உண்டு. நார்விக்கிலிருந்து ஜெர்மனிக்குப் போகும் இரும்பு இயற்கைப்பொருளைப் போகாமல் தடைசெய்துவிடலாம். நார்விக் என்பது ஒபாடன் வளைகுடாவிலுள்ள ஒரு துறைமுகம். இங்கிருந்து ஜெர்மனிக்கு இரும்பு தாதுப்பொருள் கொண்டுபோகப்படுகிறது. வடக்கு நார்வேயுக்கும் தெற்கு நார்வேயுக்கும், நார்வேயுக்கும் ஜெர்மனிக்கும் மத்தியிலுள்ள ஜெர்மன் கடல் மார்க்கங்களை நேசதேசக் கடற்படையும் விமானப்படையும் பேரண்ட்ஸ் கடலிலும், வடக்குக் கடலிலும், பால்டிக் கடலிலும் பலமாகத் தாக்கிவருகின்றன. இதனால் ஜெர்மானியர்கள் போக்குவரவுகளுக்குச் சிறிய மீன்படகுகளை உபயோகிக்கவேண்டியதாகிவிட்டது. கடல் மார்க்கங்களை நாம் இன்னும் பலமாகத்தாக்கினால் நமக்கு விசேஷ லாபங்கள் கிடைத்துவிடும். இவ்விதம் தாக்குதல் செய்வதிலிருந்து ஜெர்மன் கடற்படையும் வெளியேவந்து பிரிடிஷ் கடற்படையுடன் போர் தொடுக்கவும் நேரிடும்.

கடைசியாக வடக்கு நார்வேயிலுள்ள பொதுஜனங்களின் மனப்பான்மையும் படையெடுக்கும் துருப்புகளுக்குச் சாதகமாயிருக்கும். நார்வேயிலுள்ள ஜனங்கள் இயற்கையாகவே விருத்தமான ஸ்வபாவமுள்ளவர்கள். இவர்களுடன் ஆயிரக்கணக்கான அயல்நாட்டு வேலைக்காரர்களும், அங்கே வைக்கப்பட்டிருக்கும் ருஷ்ய யுத்தக் கைதிகளும், ஜெர்மன் ராணுவ அதிகாரிகளால் சிக்ஷை விதிப்பதற்காக வடக்கு நார்வேக்கு அனுப்பப்பட்ட ஜெர்மானியர்களும் சேர்ந்துவிடுவார்கள். இந்தக் குளிர்ந்த பிரதேசத்திலுள்ள ஜெர்மானியர்களின் வாழ்க்கையைப்பற்றி ஜெர்மன் பத்திரிகையான மஞ்ச்னர் ந்யூஸ்டே நாக்ரிக்டனில் "ஒரு தடவை கண்ணுற்றால் அதை மறக்கவே முடியாது" என்று எழுதப்பட்டிருக்கிறது. வடக்கு நார்வேயிலுள்ள இயற்கையமைப்பு ஜனங்களை முரட்டு ஸ்வபாவமுள்ளவர்களாகச் செய்துவிடும். இங்கே வெகுகாலம் ஒருவர் வசித்தால் அவருக்குப் பைத்தியம் பிடித்துவிடும். அநேக ஸோல்ஜர்கள் ஆத்ம விசாரம் பண்ண ஆரம்பித்துவிட்டார்கள். தங்களைச் சுற்றியுள்ள நடவடிக்கைகளைப்பற்றி அவர்கள் விசாரப்படுவதில்லை.

## நேசதேசப் படையெடுப்புக்கு ஏற்படக்கூடிய சிரமங்கள்.

1940-ம் வருஷம் பிரிடிஷ் துருப்புகள் நார்வேயில் வெற்றிகரமாக இறங்குவதற்கு இடையூறாக யிருந்த் சிரமங்கள் இப்பொழுது படையெடுப்புக்கு ஏற்படாது. அப்பொழுது கையளவு பிரிடிஷ் துருப்புகள்தான் சென்றன. எதிரியின் ஆயுதபலமும் உயர்வானதாயிருந்தது. நியாய மார்க்கத்தில் நடக்கவேண்டுமென்று நினைத்த பிரிடிஷார்கள் அக்ரமம் பொருந்திய நாஸிகளின் கபடமான செய்கைகளை எதிர்பார்க்கவில்லை. மனச்சாக்ஷியைப் பொருட்படுத்தாமலிருந்திருந்தால் அவர்கள் அப்பொழுது ட்ராண்ட்ஹீமையும் மற்ற துறைமுகங்களையும் விமான நிலயங்களையும் கைப்பற்றியிருக்கலாம். நார்வேக்கு அபாயம் ஏற்பட்டிருந்தபோதிலும் அது பிரிடனுக்கு உடன்காலத்தில் உதவிசெய்ய முன்வரவில்லை. இப்பொழுது நேசதேசங்கள் ஏராளமான சிறந்த முஸ்தீப்புகளுள்ள படைபலத்தை நார்வேயுக்குக் கொண்டுபோகக்கூடும். தளங்களிலிருந்து உதவியும் அனுப்பக்கூடும். இம்மாதிரியான படையெடுப்பை லண்டனிலிருக்கும் நார்வே அரசாங்கமும் நார்வேயிலுள்ள பொதுமக்களும் வரவேற்பார்கள்.

ஆகிலும் படையெடுப்புச் செய்வதற்கு, அநேக சங்கடங்களுமிருக்கின்றன. நாஸிகள் அத்தேசத்தில் பலமாக ஊன்றியிருக்கிறார்கள். விமான தளங்களிருப்பதும் டென்மார்க்கும் ஜெர்மனியும் சமீபத்திலிருப்பதும் ஸப்ளைகள் கொண்டுவருவதற்கு விசேஷ வசதியளிக்கக் கூடும். நேசநாடுகளுக்கு ஸப்ளைகள் வருவதற்கு 400 மைல்கள்கொண்ட கடல் மார்க்கத்தை அவர்கள் ரக்ஷிக்கவேண்டும். படையெடுக்கும் துருப்புகளுக்கு ஆரம்பகாலத்தில் குறைவான சண்டை விமானங்களின் உதவிதான் கிடைக்கக்கூடும். ஆகிலும் ஸ்காத்லாந்திலிருந்தும் ஷெட்லாந்திலிருந்தும் கனமான வெடி விமானங்கள் புறப்பட்டு இடைவிடாது நார்வேயை வெடிகுண்டுகளால் தாக்கக்கூடும்.

---

# அமெரிக்காவுக்கு பிரிடன் செய்யும் பிரதியுபகாரம்.

### விமானங்கள், பீரங்கிகள், சுரங்க வெடிகள் ஸப்ளை செய்யப்படுகின்றன.

அமெரிக்கத் துறைமுகத்தில் ஒரு அமெரிக்க சிப்பாய் கப்பலேறியவுடன் அவன் பிரிடிஷ் முகாமுக்கு வரும் வரையிலும் பிரிடிஷ் முஸ்தீப்புகளும் உதவிகளும் அவனுக்கு அனுப்பப் படுகின்றன. பயிற்சி காலத்திலும், யுத்தத்திலும் அவன் பிரிடிஷ் தளவாடங்களைத்தான் உபயோகிக்கிறான். பிரிடிஷ் கப்பலில் அவன் பிரயாணம் செய்கிறான். பிரிடனிலிருக்கும் பொழுது பிரிடிஷ் தொழிலாளர்களால் பிரிடிஷ் தளவாடங்களைக் கொண்டு அதிவேகமாக அமைக்கப்பட்ட முகாம்களிலும் விமான தளங்களிலும் அல்லது அமெரிக்கர்களுக்கு வசதி அளிப்பதற்காக மின்சார விளக்கு பல்பு, கம்பளி போன்ற சிறிய வஸ்துக்கள் முதல் சகல விதமான முஸ்தீப்புகளையும் போட்டுவிட்டு பிரிடிஷ் துருப்புகள் வேறு இடங்களுக்குச் சென்ற ஸ்தானங்களினும் அவர்கள் வசித்துவருகிறார்கள்.

இதுதான் அமெரிக்கக் குத்தகைக்கடன் திட்டத்துக்கு பிரிடன் செய்துவரும் பதில் உதவி. உலகம் பூராவிலும் அமெரிக்கப் படைகள் பரவ ஆரம்பித்தது முதல் அமெரிக்காவுக்கு பிரிடன் செய்துவரும் பேருதவியும் இதுதான்.

### நூற்றுக்கணக்கான ஸ்பிட் பையர் விமானங்கள்.

சென்ற நவம்பர் மாதத்தில் ஈகிள் விமானப்படை பகுதியின் விமானிகள் பிரிடிஷ் விமானப்படையினரிடம் விடைபெற்றுச் சென்றபொழுது ஈகிள் விமானப்படையிருந்த தளமும் விமானப்படையைச் சேர்ந்த ஸ்பிட் பையர் விமானங்களும் அமெரிக்க விமானப் படையுடன் சேர்க்கப்பட்டன. அட்லாண்டிக்கடல் தாண்டியிருக்கும் அமெரிக்கர்களுக்கு நூற்றுக்கணக்கான ஸ்பிட் பையர் விமானங்களை நாம் கடன் கொடுத்திருக்கிறோம். பிரிடனில் பல்வேறு விமான தளங்களில் வேலை செய்துவரும் விமானப்படையினருக்கு முக்கிய முஸ்தீப்பான 13,000 துவிச்சக்கர வண்டிகளையும் நாம் ஸப்ளை செய்திருக்கிறோம். அமெரிக்க தொழிற்சாலைகளில் கட்டப்பட்டு ஐரோப்பாவுக்கு வரும் விமானங்களையும் நடவடிக்கை களுக்குப் பின் திரும்பிவரும் விமானங்களையும், பழுதுபார்க்கும் சாலைகள், சாமான் கிட்டங்கிகள், விமானம் தங்குமிடங்கள், விமான தளம் உள்ள ஒரு பெரிய தொழிற்சாலையில் அமைத்துப் பழுதுபார்க்கிறார்கள். வெகு நாளாக இந்தத் தொழிற்சாலையில் நவீன யந்திர சாதனங்களமைத்து பிரிடிஷ் விமானப்படையின் உபயோகத்துக்காக நிர்மாணிக்கப்பட்டு இருந்தது. இப்பொழுது பதிலுதவியளிக்கும் முறையில் அமெரிக்கர்களின் உபயோகத்துக்கு விடப்பட்டிருக்கிறது. அமெரிக்கப் படைகளின் உபயோகத்திற்காக மிலியன் கணக்கான அடிகள்கொண்ட பிரதேசத்தை விமான உற்பத்தி இலாகா நிர்மாணம் செய்திருக்கிறது. சாமான் கிடங்குகளுக்காக யுத்த ஆபீஸ் 20 மிலியன் அடிகள்கொண்ட ஸ்தலத்தை விட்டுக் கொடுத்திருக்கிறது.

### கப்பல்கள் மீதப்படுத்தப்படுகின்றன.

ஆயிரக்கணக்கான டன்கள் எடைமானமுள்ள கப்பல்களை மீதப்படுத்துவதற்காக பதில் உதவியளிக்கும் முறையில் அமெரிக்கர்களின் உபயோகத்திற்காக பிரிடனில் ஒரு ராணுவ ஆஸ்பத்திரி கட்டப்பட்டிருக்கிறது. இந்த ஆஸ்பத்திரியில் ஏராளமான மர சாமான்களுள்ள அறைகளும், அமெரிக்கச் சேனையைச் சேர்ந்த வைத்திய இலாகா உத்தியோகஸ்தர்கள் உத்தரவின்படி மருந்து வசதிகளுள்ள வைத்தியசாலைகளும் நவீன முறையிலுள்ள ரண வைத்திய ஆயுதங்களும் X ray பரிக்ஷை செய்யும் சாதனங்களுமுள்ள ஆப்ரேஷன் கட்டடங் களும் அமைக்கப்பட்டிருக்கின்றன. இந்தக் கட்டடம் கட்டுவதிலும் வைத்திய வசதிகள் அமைப்பதிலும் 15 மிலியன் பவுன்கள் செலவாகியிருக்கிறது.

அமெரிக்கப் படைகள் பிரிடனில் உபயோகிக்கும் உஷ்ணமும் மின்சார வெளிச்சமும் பதிலுதவிக் கணக்கில் சேர்க்கப்படுகிறது. அவர்களுக்கு முக்கியமான உணவுப்பொருள்களான டப்பிகளில் அடைத்த இறைச்சியும், மீனும் அமெரிக்காவிலிருந்து அனுப்பப்படுகிறது. பிரிடனிலுள்ள உணவு ஸ்டோரிலும் புதிய காய்கறிகளும், மாவும், ரொட்டியும், ஊறுகாய்களும், அமெரிக்கப் படைகளுக்குப் பிரியமான கோகோ கோலாவும் இன்னும் அநேக உணவு சாமக்ரியைகளும் சேமித்து வைக்கப்பட்டிருக்கின்றன. இதன் மூலம் ஏராளமான கப்பல்கள் வெடிமருந்து சாமான்கள் கொண்டுவருவதற்கு மீதப்படுத்தப்படுகின்றன.

### அமெரிக்க நகரங்களின் தற்காப்பு.

பதிலுதவி செய்யும் ஏற்பாடு இந்தத் தீவுடன் நின்றுவிடவில்லை. 6,000 புகைக் குண்டுகளும், ஏராளமான விமானம் சுடும் பீரங்கிகளும், பீரங்கிக் குண்டுகள் உற்பத்தி செய்யும் 12 யந்திர சாதனங்களும், சென்ற வருஷத்தில் அமெரிக்காவுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. மிலியன் கணக்கான உணவுப்பொருள்களும், மிலியன்கள் கணக்கான தோட்டா குண்டுகளும் 25 பவுண்டு கனமுள்ள குண்டுகளை வீசும் அநேக பீரங்கிகளும், 5 லக்ஷம் டாங்கி உடைக்கும் சுரங்க வெடிகளும் கைத்துப்பாக்கிகளும் யுத்த ஆபீஸ் ஸ்டோர்களிலிருந்து ஜெனரல் ஐசன் ஹவரின் துருப்புகளின் உபயோகத்துக்கு வடஆபிரிக்காவுக்கு அனுப்பப்பட்டன. அமெரிக்கர்கள் முதல் முதலில் ஆபிரிக்காவில் இறங்குவதற்காகச் சென்ற யுத்தக் கப்பல்களிலும் துருப்பேற்றிச் செல்லும் கப்பல்களிலும் மூன்றில் இரண்டு பாகம் பிரிடிஷாரைச் சேர்ந்தது.

பிரிடன் பிரதியுபகாரம் செய்திருக்கும் அளவு பல்வேறு இடங்களில் பரவியிருப்பதால் இந்தக் கணக்கு ஏட்டை இங்கிலாந்திலோ அல்லது அமெரிக்காவிலோ உள்ள ஒரு உத்தியோகஸ்தரும் எழுதி முடித்து பிரிடன் எவ்வளவு தொகை கொடுத்துவிட்டதென்று சொல்ல முடியாது. எவ்வகையிலும் டாலர்களிலும் பவுன்களிலும் இந்த உதவியை மதித்துப் பார்ப்பது சரியல்ல. பிரிடனுக்குச் சங்கடமான காலத்தில் குத்தகைக்கடன் திட்டத்தை நிறைவேற்றி அதன்படி உதவவேண்டுமென்று தீர்மானித்த அமெரிக்காவின் மனப்பான்மைக்கும், இதற்குப் பதிலாக உதவி செய்யக்கூடிய நிலைமையை அடைவதற்கு பிரிடிஷார்கள் செய்திருக்கும் தியாகங்களுக்கும் அனுபவித்திருக்கும் சிரமங்களுக்கும் எடுத்துக்கொண்டிருக்கும் முயற்சிகளுக்கும் நாணயத்தில் மதிப்பே போடமுடியாது.

---

## பிரீஸ்ட் என்னும் டாங்கி எதிர்ப்பு பீரங்கி.

மகத்தான முன்னேற்ற யுத்தம் ஆரம்பிப்பதற்கு நேசதேசச் சேனைகள் தயார் செய்து வரும் பொழுது டாங்கிகளைத் தகர்க்கும் சாதனங்களையும் உற்பத்தி செய்வதிலும் அதிக கவனம் செலுத்தப்படுகிறது. எல் அலமீனிலிருந்து ட்ரிபோலிக்கு அச்சுப்படைகள் பின்வாங்கி வந்தபொழுது ரோமலின் பான்ஸர் துருப்புகளை ஜெனரல் கிராண்டு மோட்டார் வண்டிகளில் அமைக்கப்பட்டிருந்த 105 மிலிமிடர் துவாரமுள்ள டாங்கி எதிர்ப்பு பீரங்கிகள்தான் சின்னபின்னம் செய்தன. அதிவேகமாகச் சுடும் இந்த பீரங்கியானது வேகமாக முன்னேறுவதற்கு சாதகமானது. இதை ஏற்றிச் செல்லும் மோட்டார் மணிக்கு 30 மைல் வீதம் போகக்கூடியது. இந்த பீரங்கியுடன் 5 மிலிமிடர் வாயுள்ள யந்திர பீரங்கியும் டாம்மி துப்பாக்கியும் தானுகச் சுடும் துப்பாக்கியும் குண்டுகள் வர்ஷிக்கும்.

இந்த பிரீஸ்ட் என்னும் பீரங்கியைப்பற்றி பேசும்பொழுது ஜெர்மானியர்கள் பெருமை கொண்டிருக்கும் அதிக வேகம் பொருந்திய 88 மிலிமிடர் துவாரமுள்ள பீரங்கிகளை எதிர்க்கும் சக்தி "பிரீஸ்ட் பீரங்கிக்குண்டென்று" மிஸ்டர் சர்ச்சில் சொல்லியிருக்கிறார்.

---

## இந்தியச் சிப்பாயின் நடவடிக்கையில் மாறுதல்கள்.

### அதிக நாகரீக முறைகள்.

சென்ற யுத்தத்தில் போர் புரிந்த இந்தியச் சிப்பாயைவிட அவனுடைய புதல்வனின் நடவடிக்கைகள் முற்றிலும் மாறுபாடு அடைந்துவிட்டன. அவனுக்கு நாகரீக முறைகள் அறிமுகமாகிவிட்டன. அவனுக்கு ஊதியமும் அதிகமாகக் கொடுக்கப்படுகிறது. அதைச் செலவிடவேண்டுமென்ற நோக்கமும் அவனுக்கு ஏற்பட்டிருக்கிறது.

இந்தியச் சிப்பாய்களுக்குத் தேவையானவைகளை ஸப்ளை செய்வதற்காக ஏற்படுத்தப்பட்டிருக்கும் பண்டகசாலை மானேஜர்கள் இவ்விதமாக ரிப்போர்ட்டு செய்திருக்கிறார்கள். வடமேற்கு இந்தியாவிலிருக்கும் பண்டக சாலை மானேஜர் இந்தியத் துருப்புகள் உள்நாட்டு பீடிக்குப் பதிலாக பிரிடிஷ் சிப்பாய் உபயோகிக்கும் சுருட்டுகளை உபயோகிக்கிறாரென்று

வெளியிடுகிறுன். அவன் வாசனை ஏற்றிய தேங்காய் எண்ணெயை வாங்குவதுடன் நவீன முறையில் தயாரிக்கும் கேசவர்த்தினி மெழுகையும் வாங்கப் பிரியப்படுகிறுன்.

கல்வி கற்கிறுன்.

அவனுடைய ஊதியத்தில் பெரும்பாகம் நோட் புஸ்தகங்களும் அட்டைகளும் வாங்குவதிலும் உபயோகப்படுத்தப்படுகிறது. இதற்குக் காரணம் இன்றைய இந்திய சிப்பாய் கல்வி கற்றவனுகவுமிருப்பதுதான். தொன்று தொட்டு சேனையில் நாவித வேலை செய்து வந்தவனுக்கு ஆபத்து வந்துவிட்டது. ஐரோப்பிய சிப்பாயைப்போல இந்தியச் சிப்பாயும் ஷவரத்துக்குத் தேவையான சோப்புகளையும் கத்திகளையும் வாங்கி தானே ஷவரம் செய்து கொள்ள முயன்று வருகிறுன்.

கடிகாரம் கட்டுவதற்கு லாயக்கான தோல்களின் விற்பனையும் அதிகரித்திருக்கிறது. இதிலிருந்து இந்தியச் சிப்பாய் காலப்போக்கை சரியானபடி உணர்ந்து அதன்படி நடந்து கொள்ளுகிறுனென்றும் புலப்படுகிறது.

---

## டாக்டர் கோயபல்ஸுக்கு ஒரு இந்தியா தேசப்படம் அனுப்பவேண்டும்.

டாக்டர் கோயபல்ஸ் தன்னுடைய மேஜையின்மேல் ஒரு இந்தியாவின் தேச படத்தை பெற்றிருந்தால் இந்திய மக்களுக்கு கற்பனையாக அவன் ஒலிபரப்பில் செய்யும் பிரசங்கங்கள் அதிக சாரமுள்ளதாகவிருக்கும். அவன் சமீபத்தில் செய்த தவறை கவனியுங்கள்.

1943-ம் வருஷம் ஜூன் மாதம் 13-ம் தேதியன்று வங்காள பாஷையில் ஒலிபரப்பில் விடுத்த செய்தி அறிக்கையில் பெர்லின் ஒலிபரப்பாளர் பின்வருமாறு கூறினர். காஷ்மீரிலுள்ள ஸ்ரீநகரத்தில் ஒரு துருப்பேற்றிச் சென்ற ரயில்வண்டித் தொடர் இருப்புப்பாதையைவிட்டு நழுவி விட்டதன்மூலம் 100 பேர்கள் மாண்டனர். 200 பேர்களுக்கு பலத்த காயம் ஏற்பட்டுவிட்டது. டாக்டர் கோயபல்ஸுக்கு ஒரு விஞ்ஞாபனம். ஸ்ரீநகர் என்பது சமீபத்திலிருக்கும் ரயில்வே ஸ்டேஷனிலிருந்து 100 மைல்களுக்கப்பாலிருக்கிறது. சமீபத்தில் சில வாரங்களில் பிரிடிஷ் வெடி விமானங்களும் பீரங்கிகளும் தாக்கிக் கவிழ்ந்துபோன ஜெர்மன் துருப்பேற்றிச் செல்லும் ரயில்வண்டித் தொடர்களின் நஷ்டத்தைக் கண்டு உங்களுக்கு புத்தி பிரமம் ஏற்பட்டிருக்கிறது போல் தோன்றுகிறது.

---

## முதல் உதவிசெய்யும் படைகளுக்குப் பத்து நீதிகள்.

"சிகிச்சைக்குத் தக்கவாறு நோயாளியை அமைக்கக்கூடாது. நோயாளிக்குத் தகுந்த சிகிச்சையை அளிக்கவேண்டும்" என்று உதவி கோஷ்டியாரின் பயிற்சியையும் அலுவல்களையும் பற்றி சமீபகாலத்தில் பிரசுரம் செய்யப்பட்ட வைத்திய புஸ்தகத்தில் புத்திமதி உரைக்கப்பட்டிருக்கிறது.

முதல் உதவிப்படையினரின் உபயோகத்துக்காக மற்ற ஒன்பது நீதிகளையும் இங்கு கூறுவோம்.

(2) அடிபட்டவருக்கு அன்பும் ஆதரவும் காட்டவேண்டும், (3) நோயாளிக்கு நம்பிக்கையுண்டாகும்படி நடந்து கொள்ளவேண்டும். (4) அடிபட்டவர் அறியும்படியாக நோயாளியின் ஸ்திதியைப்பற்றி விவாதம் செய்யக்கூடாது. (5) கூடுமானவரையில் அமைதியுடனும் சாந்தத்துடனுமிருக்க வேண்டும். (6) உனக்கு அதைரியமேற்பட்டால், அதை நோயாளி அறியும்படி காண்பிக்கக்கூடாது. (7) உன்னுடைய தைரியம், நம்பிக்கை, சக்தி முதலியவற்றை நோயாளிக்குப் புகட்டவேண்டும். (8) சமீபத்தில் சேதப்பட்டவர்களிருந்தால் அப்பொழுது உன்னுடைய சகாக்களின்போல் குறைகூறக்கூடாது. (9) உன்னுடைய சாமர்த்தியத்தில் நம்பிக்கை கொண்டவரைக் கைவிடாதே. (10) ஒரு காயத்தின் அளவையும் தோற்றத்தையும் கண்டு காயத்தின் போக்கு இவ்வளவுதான் என்று மதித்துவிடாதே.

முதல் உதவி செய்யும் படையினருக்கு தனிப்பட்ட முறையில் குறிப்பிட்ட முக்கியமான சில பொறுப்புகளிருக்கின்றன என்று அவர்கள் அறிந்துகொள்ளவேண்டும். மேலும் அவர்கள் ஸர்வதேச இயக்கத்தின் ஒரு கோஷ்டியைச் சேர்ந்தவர்களென்றும் அவர்கள் அறியவேண்டும். தனிப்பட்ட நபர்கள் எவ்வளவு சாமர்த்தியத்துடனும், பயபக்தியுடனும் தொண்டுசெய்தாலும் நன்முகப் பயிற்சிபெற்ற கோஷ்டியினர் செய்யும் வேலைக்கு சமமாக யிருக்கமுடியாது.

இந்தச் சிறிய புஸ்தகம் முதலுதவி செய்யும் படையினருக்குப் பயிற்சியளிப்பதற்கு உதவி செய்யும்பொருட்டு எழுதப்பட்டிருக்கிறது. முதலுதவி முறையில் அனுபோகப் பயிற்சி முறைகளையும், சேதமுற்றவர்களைத் தூக்கி வேறு இடத்திற்குக் கொண்டுபோகும் முறைகளையும், காயம்கட்டும் துணிகள், மருந்துகள், அவைகளின் உபயோகங்களையும், காயங்களின் தினுசுகள், அவைகளுக்குச் செய்யவேண்டிய சிகிச்சைகள், முதலியவைகளையும்பற்றி அதில் எழுதப்பட்டிருக்கிறது. இங்கிலாந்திலும், பர்மாவிலும், இந்தியாவின் சில பாகங்களிலும் நடைபெற்ற விமானத்தாக்குதலில் அனுபவம் பெற்றவர்களின் அபிப்பிராயத்தை ஒட்டி இந்த நூல் எழுதப்பட்டிருக்கிறது. முதலுதவிப் படையினர் உபயோகத்துக்காக அநேக படங்களும் அதில் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

---

# காய்கறிகளை அதிகமாய்ச் சாப்பிடுங்கள்; நீங்களே கொஞ்சம் உற்பத்தியும் செய்யுங்கள்.

## அதிகவிலையைத் தடுப்பதற்குச் சொந்தமாய் உற்பத்திசெய்தல் அவசியம்.

(T. K. மேனன்).

இப்போதைய இந்திய அரசாங்க ஆகார இலாகா பிரித்துக்கொடுத்தல், ஜனங்களிடையே உள்ள ஒத்துழையாமை, சச்சரவுகள், நம்பிக்கையற்ற தன்மை ஆகிய இவைகளும், இவைகள்போன்ற மற்றும் பல விஷயங்களை ஒழுங்குபடுத்தியாகவேண்டியிருக்கிறது. நாட்கள் செல்லச்செல்ல இந்தியர்கள் ஆகார விஷயங்களில் பஞ்சம் இல்லை என்று தெளிவாய்த் தெரிந்துகொண்டுவருகிறார்கள். கோதுமை, அரிசி, சோளம் ஆகிய இவைகள் சென்ற சில மாதங்களில் கிடைத்ததைவிட மிகவும் அதிகமாகவே கிடைத்துக்கொண்டிருக்கின்றன.

ஒரு தேசத்தின் மக்கள் தங்களை ஆரோக்கியத்தோடு வைத்துக்கொள்ள நன்றாக தகுந்த அறிவோடு சாப்பிடவேண்டும். இதற்கு அரிசியையும், கோதுமையையும், சோளத்தையும் மட்டும் சாப்பிடுதல் நமக்குப்போதிய பயன் தராது. நமது சாப்பாட்டில் அரிசி முதலியவைகளுக்கடுத்த முக்கியத்வம் உள்ள வஸ்து எது என்று கண்டுபிடித்து அவைகளில் நம் கவனத்தை செலுத்தவேண்டும். அத்தகைய பொருள் காய்கறிகளேயாகும்.

### அதிகமாகிக்கொண்டுவரும் விலைவாசிகள்.

அதிகமாய் விளைபொருள்கள் கிடைக்கும் இந்நாட்டில் அவைகளின் விலை அதிகமாகிக் கொண்டுவருவதை கலக்கத்தோடும், கோபத்தோடும் பொது மக்கள் கவனிக்கின்றனர். இருந்தாலும், நியாயமான முறையோடு அரசாங்கத்தை அவர்கள் குறைகூறவில்லை என்று சொல்லலாம். அத்துடன் விலை குறைச்சலானதும், நல்லதுமான காய்கறிகளை உற்பத்தி செய்வதற்குரிய சாதாரணமான வழிகளிலும் கூட அவர்கள் பிரயத்தனப்படவில்லை என்றும் சொல்லவேண்டும்.

அந்த "சாதாரணமான வழி" என்ன என்று நீங்கள் கேட்கலாம்? உங்கள் சொந்த தோட்டங்களிலே நீங்கள் காய்கறிகளை அதிகமாய் உற்பத்தி செய்யுங்கள் என்பதுதான் அதற்குப் பதில். மிகவும் அதிகமான அளவிலே காய்கறிகளை உண்டுபண்ணுங்கள்; கோஸ்க் கீரைகளை அதிகமான விலையிலே விற்கும் சந்தைகளை அதைரியப்படுத்துங்கள்.

இந்திய நகரங்களிலே உள்ள தோட்டங்களையும், பேட்டைகளையும் ஒன்றாய் எடுத்துக் கொண்டு பார்த்தோமானால், நன்றாய் விளைவுக்குபயோகப்படும்படியான ஆயிரக்கணக்கான ஏக்கரா இடங்கள் இருக்கின்றன. இத்தகைய தோட்டங்களிலே இப்பொழுது பூச்செடிகளை உண்டாக்கி பூக்களை உண்டாக்குவது ஒரு பெருங்குற்றமேயாகும். உலகிலே சமாதானமும், மனிதர்களுக்குள் நல்லெண்ணமும் உண்டாகும் வரையிலும் இந்த ஏக்கராக்களில் உணவுப் பொருள்களை உற்பத்தி செய்யவேண்டும். இந்த தோட்டங்கள் எல்லாம் முக்கியமான யுத்த அரங்கங்களாகும். ஆகவே இந்த உள்நாட்டு அரங்களிலே நாம் எல்லோரும் போரிட்டு ஜயிக்கவேண்டும். அதுவும் தீரமாயும், வெற்றியோடும் ஜயிக்கவேண்டும்.

காய்கறிகள்தான் நமக்குள்ள ஆகார வசதிகளை போதுமானவையாய் செய்பவைகளாகும். அவைகள் அளவோடு நமக்கு சத்து அளிப்பவைகளாகவே இருக்கின்றன. துரதிர்ஷ்டவசமாய் இத்தேசத்தில் விருந்துகளிலும், பஞ்சகாலத்திலும்கூட நமது உணவில் மிகவும் அதிகமான அளவிலே தானியப் பொருள்களை நாம் தொன்றுதொட்டு உபயோகித்துவருகிறோம். இன்றைய தினம் இந்திய மக்களின் சுகத்தையும், பலத்தையும் அபிவிருத்தி செய்வதென்பது அதிகமாக காய்கறிகளை உற்பத்திசெய்து உபயோகப்படுத்துவதினாலேதான் முடியும் என்று ஒன்றுபட்ட கருத்து உண்டாகியிருக்கிறது.

மேற்கூறியதை பலப்படுத்துவதற்கு கணக்குக் குறிப்புகள் கொடுப்பதிலிருந்து வெளிப்படும். ஒரு கைத்தொழிலாளி ஒருவன் ஒவ்வொரு நாளும் 2,800 கலோரிகள் (Calories) சூடு நிறைந்த உணவைச் சாப்பிடவேண்டும். ஆனால் இவைகள் எல்லாம் தானியப்பொருளாக சாப்பிடக்கூடாது. அத்தகைய ஆகாரம் சரியான ஆரோக்கியம் தருவதற்குப் போதுமான சத்துப்பொருள்களையும், தாது உப்புக்களையும் உடையதாயிராது. ஒரு சிறிய காலிபிளவர் (Califlower) என்ற கீரையும், மூன்று அல்லது நான்கு தக்களிப் பழத்திலும் உள்ள சத்தானது 2 முட்டைகள், 2 அவுன்ஸ் கரி அல்லது ஒரு கோப்பை பால் இவைகளிலுள்ள சத்து எவ்வளவோ அத்தனை அளவாகும். இவ்விதப் பிரிவு அதிகச் செலவுள்ள ஆகாரப் பொருள்களுடன் தயார் செய்யும் ஒரு ஆகார அட்டவணையில் விலை.குறைவாயுள்ள காய்கறிகளைச் சேர்த்துத் தயாரிக்க ஒரு உதவியாகத்தான். இந்தியாவிலுள்ள ஒருவனுக்கு ஒரு வருஷத்தில் வேண்டியிருப்பது 228 பவுண்டு காய்கறிகள் என்றும், ஆனால் உண்மையில் இப்பொழுது ஒவ்வொருவரும் பெறுவது 30 பவுண்டு காய்கறிகள்தான் என்று கணக்கெடுக்கப்பட்டிருக்கிறது. இதனால் நம் தேச மக்கள் போதிய ஆரோக்கியமின்றி இருக்கிறார்கள் என்பதில் ஆச்சரியமே இல்லை.

கடை வீதிகளில் காய்கறிகளின் விலை மிகவும் அதிகமாகிக்கொண்டேபோகிறது. ஆதலால் அதிகமான காய்கறிகளை உற்பத்தி செய்வதென்பது, அதிகமாய்ப் பணத்தைச் சேமிப்பது என்பதுதான் அர்த்தம். இச்சண்டையின் முழக்கங்கள் எல்லாம் ஒவ்வொரு வருடமும் அதிகப்பணம் வேண்டிய அவசியத்தை ஏற்படுத்திவிட்டன. யுத்தத்திற்குப் பிந்திய காலத்திலே, வியாபார மந்தம் ஏற்படும்போது நீ இப்பொழுது சேகரிப்பவை யாவும் உபயோகப்படுபவைகளேயாகும். ஆகையால் "அதிகமாய் காய்கறிகள் உற்பத்தி செய்வோம்; பணங்களை மாரி காலங்களுக்கு உபயோகப்படுத்துவோம்" என்பதுதான் நல்லதும், புத்திசாலித்தனமானதுமான பிரமாணமாகும்.

சில நடுத்தரமான மனிதர்களால் "நமக்கு அன்றாடம் வேண்டிய அளவு காய்கறிகள் கிடைக்கும்போது நாம் ஏன் அதிகம் உற்பத்தி செய்வதைப்பற்றி சிரமம் எடுத்துக்கொள்ள வேண்டும்" என்ற தகுதியான கேள்வி கேட்கப்படலாம். அதற்குரிய விடை மிகவும் சாதாரணமானதாகும். இந்தவிதமான அவசரத் தேவைகள் உள்ள காலத்தில் ஒவ்வொருவரும் தங்களைத்தானே கவனித்துக்கொள்ளுவதுமட்டும் போதாது. யுத்த உலகிலும், யுத்தம் முடிந்த உலகிலும், சமூக முன்னேற்றத்தையும், சிக்கனத்தையும் நிலவுமாறு செய்வதற்கு ஒத்துழைப்பு என்பதுதான் தகுதியான திறவுகோலாகும்.

லெட்டூஸ் கீரை, காராட் கிழக்கு, தாதுப்பொருள் நிறைந்த செலரி, பசளைக்கீரை இன்னும் இவைபோன்ற பச்சைக் காய்கறிகள் வாத ரோகத்தால் கஷ்டப்படும் மக்களுக்கு சுகந்தருவனவாகும். உடலுக்குவேண்டிய கந்தகப்பொருள்கள், கபேஜ், வெங்காயம், காரட் கிழங்கு ஆகியவைகள் சரியான முறைகளிலே தயாரிக்கப்பட்டால் அவைகளில் அதிகமாய்க் கிடைக்கும். லெட்டூஸ்கீரை, காபேஜ், தக்களி, காரட், பஸலி ஆகிய இவைகளில் பால், கரி, கோழி, கோதுமை, அரிசி ஆகிய இவைகளில் இருப்பதைவிட அதிகமான தாதுப் பொருள்கள் இருக்கின்றன.

எப்படியும் நம் தேசத்தில் யாரும் பசியால் வருந்தாமல் பார்த்துக்கொள்ளுவது நம் கடமையாகும். நம் தேசத்தினர் செய்யும் தியாகங்களை நோக்குமிடத்து, இந்தக் காய்கறிகளை உற்பத்தி செய்யும் வேலையை நாம் ஒவ்வொருவரும் எடுத்துக்கொள்ளுவது மிகவும் சிறிய மலையாகத் தோன்றவில்லையா?

மழைகாலமாகிய இக்காலந்தான் நாம் சுறு சுறுப்பாயிருக்கவேண்டிய காலமாகும்.

---

# நான்காவது யுத்த சேவை கண்காக்ஷி.

## திருச்சினாப்பள்ளியில் புத்தூர் மைதானத்தில் 16—7—43 முதல் 26—7—43 வரையில் நடைபெறும்.

### பிரவேசக் கட்டணம் கிடையாது.

**கண்காக்ஷி.**

திருச்சினாப்பள்ளியில் யுத்த சேவை கண்காக்ஷியை ஜுலை மாதம் 16-ம் தேதியன்று தேசீய யுத்த முன்னணி மாகாணத் தலைவரான ஸர். பி. டி. ராஜன் திறந்து வைப்பார். கண்காக்ஷி பத்து தினங்கள் வரையில் நடைபெறும். இது நான்காவது கண்காக்ஷி. முதலாவது, கண்காக்ஷி மார்ச்சு மாதத்தில் டில்லியில் நடைபெற்றது. அதை மேன்மை தங்கிய சேனாதி

பதியான ஸர் ஆர்க்கிபால்டு வேவல் திறந்து வைத்தார். ஏழு நாட்களில் 3 லக்ஷம் பேர்கள் கண்காக்ஷியைப் பார்வையிட்டார்கள். அது இனிது முடிவடைந்தது. இரண்டாவது கண் காக்ஷி பம்பாயில் ஏப்ரல் 20-ம் தேதி முதல் மே மாதம் 7-ம் தேதி வரையில் நடைபெற்றது. 10 லக்ஷம் ஜனங்கள் அதைக் கண்ணுற்றார்கள். மூன்றாவது கண்காக்ஷி பங்களூரில் மாக்ஷிமை தங்கிய மைசூர் மகாராஜா அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. 5 லக்ஷம் ஜனங்கள் அதைப்பார்க்க குழுமினார்கள்.

### அதன் நோக்கங்கள்.

இந்த யுத்தக் கண்காக்ஷி ஜனங்களுக்கு அறிவூட்டுவதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருக் கிறது. நேசநாடுகளிடமிருக்கும் தளவாடப்பெருக்கை ஜனங்களுக்குப் பிரகடனம் செய்வதாக இதன் உத்தேசமில்லை. இந்த மூவகைப்பட்ட சேவைகளில் இந்தியர்கள் பயிற்சி பெற்று வருகிறார்களென்றும் சமாதான காலத்தில் இந்தத் தொழில்களில் ஜனங்கள் ஈடுபடலா மென்றும் காண்பிக்க முயற்சிக்கப்படுகிறது. நமது தேசத்தின் யுத்த முயற்சி எவ்வகைப் பட்டதென்று ஜனங்கள் கண்ணுறக்கண்டு அதன் மூலம் ஜனங்களின் மனோதைரியத்தைப் பலப்படுத்துவதுதான் முக்கியமான லக்ஷியம். கண்காக்ஷியின் முக்கியமான அம்சம் யந்திர சம்பந்தமானது.

### இதன் பகுதிகள்.

இதில் ஐந்து பகுதிகளிருக்கின்றன. இந்தியக் கடற்படை, இந்தியச் சேனை, இந்திய விமானப்படை, தொழிலாளர் இலாகா, பொதுஜன இலாகா.

### இந்தியக் கடற்படை.

கண்காக்ஷியிலுள்ள முக்கியமான சாமான்கள். 21 இஞ்சு நீளமுள்ள மீன்வெடி, சுரங்க வெடியும், அதன் நங்கூரமும், கடற்பீரங்கிகள் (பெங்கால் என்னும் கப்பலில் அமைக்கப் பட்டிருந்த பீரங்கி போன்ற ஒரு 12 ராத்தல் குண்டெறியும் பீரங்கி). நீர்மூழ்கிகளைத் தாக்கும்; வெடி குண்டுகள், சுரங்க வெடிகளின் நங்கூரத்தை அறுக்கும் கருவி, வெடி மருந்து சாமான் கள், பல ரக யுத்தக் கப்பல்களின் உருவங்கள். மேடைகளும், பீரங்கிகளும் உள்ள ஒரு இந்திய யுத்தக் கப்பலின் முன் பாகம் மட்டும் பம்பாயில் கட்டப்பட்டு அதுவும் கண்காக்ஷியில் வைக்கப்பட்டிருக்கிறது.

### இந்திய சேனைப் பகுதி.

ஜெனரல் லீஸ், ஜெனரல் கிராண்ட்ஸ் முதலிய டாங்கிகளும், அநேக கவசம் பூண்ட மோட்டார்களும், பலவகைப்பட்ட விமான எதிர்ப்பு பீரங்கிகளும் இருக்கின்றன. டாங்கிகள் எதிர்த்து அடிக்கும் காக்ஷியும் காண்பிக்கப்படும். பீரங்கிகள் காலி வேட்டுகளைச் சுட்டுக் காண்பிக்கும். எதிரிகளிடமிருந்து கைப்பற்றப்பட்ட யுத்தத் தளவாடங்களையும் காணலாம். ஸாப்பர்ஸ், மைனர்ஸ்களுக்கும், இஞ்ஜினியர்களுக்கும், உள் நாட்டு நதிப் போக்குவரத்துப் படைகளுக்கும் வெவ்வேறு முகாம்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

### தொழிலாளர் பகுதி.

இந்தப் பகுதியில் ஒரு யந்திர சாலை அமைக்கப்பட்டு அதில் பயிற்சியாளர்கள் நேராக வேலை செய்து காண்பிப்பார்கள். டெக்னிகல் பயிற்சி திட்டத்தின்படி கற்றுக்கொடுக்கப் படும் ஒவ்வொரு முறையும் இங்கு காண்பிக்கப்படும்.

### இந்திய விமானப்படை.

டில்லியிலும், பம்பாயிலும் ஒரு ஹரிகேன் விமானம் கண்காக்ஷியில் வைக்கப்பட்டிருந்தது. இதற்குப் பதிலாக இந்தியாவில் தயாரித்த ஒரு விமானம் பங்களூரில் காண்பிக்கப்பட்டது. நொருங்கிப்போன ஜப்பானிய வெடி விமானமும், ஜெர்மன் சண்டை விமானமும் கண் காக்ஷியிலிருக்கின்றன. விமானக்கூடமும், உபயோகத்திலுள்ள ப்ளென்ஹீம் வெடி விமானமும் அதன் நுட்பமான யந்திர சாதனங்களும், பாதுகாப்பு அமைப்புகளும் காணப்படலாம். இன்னும், குடைகளும், போட்டோ கருவிகளும், வெடி விமானங்களும், பீரங்கிக்கூடமும் கண்காக்ஷியிலிருக்கும்.

### பொதுஜன இலாகா.

இந்தப் பகுதியில் செஞ்சிலுவை, ஸப்ளை இலாகா, தேசிய யுத்த முன்னணி, ஸ்திரீகளின் ஊதியமற்ற சேவைப்படை, ஸ்திரீகள் உதவிப்படை, பொதுஜன தற்காப்பு முறைகள், அதிக உணவு உற்பத்தி, முதலிய ஸ்தாபனங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

### ஸினிமா படக்காக்ஷியும், பாண்டு வாத்யமும்.

ஸினிமா படக்காக்ஷியும் பாண்டு வாத்தியமும் கண்காக்ஷியில் நிரந்தரமான அம்சம். பொட்டலில் ஸினிமாப் படக்காக்ஷி இரவு 8-மணிக்கு ஆரம்பித்து தினசரி நடைபெறும். தினசரி ராணுவ பாண்டும் வாசிக்கப்படும்.

### பிரவேசக் கட்டணம் கிடையாது.

கண்காக்ஷிகளிருக்கும் பொட்டலுக்கும், தனிப்பட்ட பகுதிகளுக்கும் பிரவேசக் கட்டணம் கிடையாது.

### கண்காக்ஷியின் விவரம்.

மற்ற இடங்களில் நடைபெற்ற கண்காக்ஷிகளைப்போல திருச்சினாப்பள்ளியிலும் எல்லா நடவடிக்கைகளும் நடைபெறும். முக்கியமானவை டாங்கிப்போர், பீரங்கிச் சண்டைகள், இந்திய இஞ்ஜினியர்கள் பாலம் கட்டுதல், ஸாப்பர்ஸ், மைனர்ஸ்களின் நடவடிக்கைகள், ஜனங்களுக்கு ருசிகரமான இன்னும் பல நடவடிக்கைகள். இதை விட நேசதேசங்களுடையவும், எதிரியுடையவும் பலவகைப்பட்ட முஸ்தீப்புகளும், காண்பிக்கப்படும். முக்கியமானவை, விமானங்கள், புகைக்கூண்டுகள், டாங்கிகள், பலவகைப்பட்ட பீரங்கிகள், கடற்படை தளவாடங்கள், உருவங்கள், யுத்தக் கப்பலிலுள்ள சகல விதமான அமைப்புகளுமுள்ள கப்பலின் முன்பாகம்.

### விசேஷ நடவடிக்கைகள்.

திருச்சினாப்பள்ளியில் நடைபெறப்போகும் கண்காக்ஷியில் விசேஷ நடவடிக்கைகளும் உண்டு.

(1) உணவுப் பொருள்களின் அதிக உற்பத்தி முறையில் விவசாய அபிவிருத்தி முறைகளும், எரு உற்பத்தியும், அதன் உபயோகமும் பலவகைப்பட்ட உணவுப் பொருள்களின் தேக புஷ்டிக்கு லாயக்குள்ள உபயோகமும் காண்பிக்கப்படும்.

(2) இஞ்ஜின்களையும், சாமான் வண்டிகளையும் பழுது பார்ப்பதற்கும் சரிவரக் காப்பாற்றுவதற்கும் தேவையான அநேக முறைகளைக் காண்பிக்கும் ரயில்வே ரிபேர் தொழிற்சாலையும், அதில் இஞ்ஜினியர்களும் வேலை செய்து வருவார்கள்.

(3) புது மாதிரியான கவசம் பூண்ட மோட்டார்களும் இருக்கின்றன. இந்தியாவின் தென் பாகத்தில் இதுவரையில் காணப்படாத கவசம் பூண்ட வண்டிகளும் கண்காக்ஷியில் வைக்கப்பட்டிருக்கும்.

---

## புதுக்கோட்டை ஸமஸ்தான தேசிய யுத்த முன்னணி நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

### பிரஸங்கம் 154. (1-வது பிரிவு.)

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 10- 7-43 | முனிஸிபல் ஆபீஸ் | ... மாலை 6.00 | | 14- 7-43 | பூங்குடி | ... மாலை 7.00 |
| 11- 7-43 | கீரனூர் | ... ,, 7.00 | | ,, | சத்யமங்கலம் | ... ,, 7.30 |
| ,, | நாஞ்சூர் | ... ,, 7.30 | | 15- 7-43 | மிரட்டுநிலை | ... ,, 7.00 |
| 12- 7-43 | பூவரசகுடி | ... ,, 7.00 | | ,, | அரிமளம் | ... ,, 7.30 |
| ,, | வேங்கடகுளம் | ... ,, 7.30 | | 16- 7-43 | உடையாளிப்பட்டி | ... ,, 7.00 |
| 13- 7-43 | பெருங்களூர் | ... ,, 7.00 | | ,, | கிள்ளுகோட்டை | ... ,, 7.30 |
| ,, | ஆதனக்கோட்டை | ... ,, 7.30 | | | | |

### பிரஸங்கம் 155. (2-வது பிரிவு).

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 17- 7-43 | முனிஸிபல் ஆபீஸ் | ... மாலை 6.00 | | 21- 7-43 | காலேஜ் A இங்கிலீஷ் | ... காலை 10.45 |
| 18- 7-43 | குடுமியாமலை | ... ,, 7.00 | | ,, | காலேஜ் B தமிழ் | ... ,, 10.45 |
| ,, | பரம்பூர் | ... ,, 7.30 | | ,, | குழிபிறை | ... மாலை 7.00 |
| 19- 7-43 | வெங்களூர் | ... ,, 7.00 | | ,, | செவலூர் | ... ,, 7.30 |
| ,, | கோனாபட்டு | ... ,, 7.30 | | 22- 7-43 | களமாவூர் | ... ,, 7.00 |
| 20- 7-43 | நச்சாந்துபட்டி | ... ,, 7.00 | | ,, | நல்லூர் | ... ,, 7.30 |
| ,, | விராச்சிலை | ... ,, 7.30 | | 23- 7-43 | பனையப்பட்டி | ... ,, 7.00 |
| 21- 7-43 | C. S. M. பள்ளிக்கூடம் | ... காலை 10.00 | | ,, | ராங்கியம் | ... ,, 7.30 |
| ,, | ராணி பெண் பாடசாலை | ... ,, 10.45 | | | | |

### யுத்தத்திற்கு ஆள் சேர்த்தல்—விளம்பரம்—மாலை 4-மணி.

| | | | |
|---|---|---|---|
| 10— 7—43 | பொன்னமராவதி. | 17— 7—43 | திருமயம். |
| 11— 7—43 | விராச்சிலை. | 18— 7—43 | தீத்தான்விடுதி. |
| 12— 7—43 | அரிமளம். | 19— 7—43 | முள்ளங்குரிச்சி. |
| 13— 7—43 | குடுமியாமலை. | 20— 7—43 | வடகாடு. |
| 14— 7—43 | ராயவரம். | 21— 7—43 | கீழாநிலை-புதுப்பட்டி. |
| 15— 7—43 | ஆலங்குடி. | 22— 7—43 | கீழாநிலை |
| 16— 7—43 | புதுக்கோட்டை. | 23— 7—43 | புதுக்கோட்டை. |

---

Sri Brihadamba State Press, Pudukkottai. 2,000—14-7-43.